Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

எழுநாதர்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-31 13-04-2005 புதன்கிழமை ஓசை-54



S.M கோல்ட் ஹவுஸ்


வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: 024-222 4247

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம் (சி-11481)

தென்னாபிரிக்காவில் பேராயர் டுட்டுவுடன் அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்திப்பு



(டேர்பன்)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தென்னபிரிகாவின் போராட்ட வீரரும், நோபல் பரிசுபெற்றவருமான பேராயர் டெஸ்மன் டுட்டுவைச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் சுமார் ஐந்து மணியளவில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. பேராயர் டெஸ்மன் டுட்டு தென்னாபிரிக்காவின் கறுப்பின மக்களின் விடுதலைப்போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தவர்களில் ஒருவராவார். அத்துடன் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றவராவார்.

இந்தச் சந்திப்பின்போது தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச் செல்வன் அவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டம், அதன் தற்போதைய நிலைமை,தற்போதுள்ள சமாதானச் சூழல், சுனாமி அழிவு, அதன் மீளமைப் பிற்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் போன்றவை தொடர்பாகவும் விளக்கிக் கூறியுள்ளார்.

இதேவேளை பேராயர் டுட்டு1990களில் தமிழீழமக்களை ஒடுக்கும் சிறி லங்கா அரசிற்கு ஆயுதத்தளபாடங்கள் விற்பதை நிறுத்த வேண்டும் எனக் குரல் எழுப்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (12 ஆம் பக்கம் பார்க்க)

சந்திரிகா அரசினைக் கண்டித்து கிளி.,தென்மராட்சியில் பேரணிகள்!

பல்லாயிரம் மக்கள் பங்கேற்பு

(அலுவலக செய்தியாளர்)

சிறிலங்கா அரசாங்கத்தைக் கண்டித்து கிளிநொச்சியிலும், யாழ். தென்மராட்சியிலும் நேற்று மாபெரும் கண்டனப் பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன. பேரணிகளின் முடிவில் சர்வதேச நாடுகளுக்கும் சிறிலங்கா சனாதிபதிக்கும் கோரிக்கை மகஜர்கள் கையளிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு கோசங்களை எழுப்பினர்.



தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அரசு தன்னாட்சி அதிகாரசபையை வழங்கக்கோரியும், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும், பொதுமக்கள் மீதும் சிறிலங்காப் படையினரும், அவர்களுடன் இணைந்து இயங்கும் ஆயுதக் குழுக்களும் மேற்கொள்ளும் தாக்குதலைக் கண்டித்தும் இந்த மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்பட்டன.

கிளிநொச்சியில் கந்தசுவாமி கோவிலடியிலிருந்தும், பண்பாட்டு மாடபத்தடியிலிருந்தும் இரு முனைகளில் ஆரம்பமான பேரணியில் பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன், பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இருபேரணிகளும் அரசுக்கு எதிரான பதாகைகளையும் சுலோகங்களையும் தாங்கி ஓங்கிய குரல் (12 ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் பயங்கரவாத அமைப்பல்ல முழு அரசமைப்பு அவர்களிடம் உண்டு

டெகெல்கா இணையத்தளம் தெரிவிப்பு

விடுதலைப்புலிகள் இயக்கம் வெறும் பயங்கரவாத அமைப்பல்ல மக்கள் நலனை முன்வைக்கும முழுமையான அரசமைப்பு என இந்திய இணையத்தளமான டெகெல்கா இணையத்தளம் அதன் நேற்றைய பதிப்பில் தெரிவித்துள்ளது. 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் திகதியிடப்பட்ட வெளியீட்டில் டெகெல்காவில் நிருபர் வி.கே.சசீகுமார் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மூன்று வாரம் தங்கியிருந்து நான்கு பக்கக்கட்டுரை எழுதியுள்ளார். அத்துடன் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் மற்றும் அரசியல் துறையைச் சேர்ந்த தமிழ்க்கவி ஆகியோருடனான செவ்விகளும்(12 ஆம் பக்கம் பார்க்க)

இல. புலனாய்வு சேவையின் உயர் மட்டத்தில் மாற்றம்!


புதியவர் நியமனம் இடம்பெறவில்லை

(கொழும்பு)

இலங்கையின் புலனாய்வு சேவையில் மீண்டும் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் புலனாய்வு சேவையின் பலமிக்க பணிப்பாளராக விளங்கிய கே. வி. டி. சுமனசேகர இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்திற்கு புதிய பணிப்பாளர் இந்த மாத இறுதியில் நியமிக்கப்படுவார் என எதிர் பார்க்கப்படுகிறது.அதுவரையில் இந்த முக்கிய திணைக்களம் தலைமையற்ற நிலையிலேயே இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களில் மாத்திரம் மூன்று முறை இலங்கை புலனாய்வு சேவையின (12 ஆம் பக்கம் பார்க்க)



தென்னாபிரிக்காவின் உபசனாதிபதி ஜகோப் சுமாவை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோது.

அமெ. அட்மிரல் வில்லியம் கதிர்காமருடன் சந்திப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய தலைமையை அண்மையில் பொறுப்பேற்றுள்ள அட்மிரல் வில்லியம் ஜே பலோன் நேற்றுமுன்தினம் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதன் போது ஆழிப்பேரலை தொடர்பிலான புனரமைப்பு மற்றும் அதுதொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் செய்து கொள்ளப்படவுள்ள பொதுக்கட்டமைப்பு என்பவை குறித்து ஆராயப்பட்டுள்ளது. இதேவேளை அட்மிரல் பலோன் ஆழிப் பேரலை யினால் பாதிக்கப்பட்ட நாட்டின் பல இடங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளதாக வெளிநாட்டமைச்சு தெரிவித்துள்ளது

துணுக்காயில் மின்னல் தாக்கி ஒருவர் பலி; மூவருக்கு எரிகாயம்

(மல்லாவி)


துணுக்காய்ப் பிரதேசத்தில் மின்னல் தாக்கி ஒருவர் பலியானதுடன் மூவர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். நேற்று மாலை 5.15 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மல்லாவி முதலாம் யூனிற்றைச் சேர்ந்த பத்மநாதன் பிரபாகரன் (வயது 26) என்பவர் மின்னல் தாக்கி அவ்விடத்திலேயே மரணமானார். அதே இடத்தைச் சேர்ந்தவர்களான அலெக்சாண்டர் அருள்செல்வன் (வயது 23),இளையதம்பி இராஜேஸ்வரன் (வயது31) மற்றும் பாலிநகரைச் சேர்ந்த இராசையா கண்ணன் (வயது 31) ஆகியோர் எரிகாயங்களுக்குள்ளாகினர்.

காயமடைந்தவர்கள் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அனிஞ்சியன் குளம் வைரவர்கோவிலடியில் மண்ணேற்றிக்கொண்டிருந்தவேளை பெய்த கடும் மழையின் போது ஏற்பட்ட மின்னல்,தாக்கியதிலேயே இத்துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (24)

நேற்று கிளிநொச்சியில் நடந்த பேரணியில்...











படங்கள்:- சசி,குகன்

பாத்தீனியம் அதிகரிப்பு

யாழ்.மருதனார் மடம் பிரதேசத்திலுள்ள விவசாயக்காணிகளில் பாத்தீனியம் செடியின் பரம்பல் அதிகரித்துள்ளன. இப்பாத்தீனியம்செடிகளைக் கட்டுப்படுத்த விவசாயிகள் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற போதும் அதனைக்கட்டுப்படுத்த முடியவில்லை.

எனவே இச்செடி அழிப்பிற்கான களைநாசினிகளைப்பெற்றுத் தருமாறு விவசாயத் திணைக்களத் திடம் அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

வரிவிளம்பரம்

SCIENCE HALL

13.04.2005 காலை 10.00 மணிக்கு O/Lமீட்டல்வகுப்பும், 16.04.2005 சனி பிற்பகல்3மணிக்கு 2007 வர்த்தகப பிரிவுகளுக்கான வகுப்புக் களும்ஆரம்பம்.நிர்வாகி. (5825)

அமுதன் கல்வி நிலையம்

13.04.2005 காலை10.00 மணிக்கு O/Lமீட்டல்பகல் நேரவகுப்புக்களும், 16.04.2005 சனி காலை 9.00 மணி 2007 கலைப்பிரிவுகளுக்கான வகுப் புக்களும் ஆரம்பம். நிர்வாகி. (5825)

விற்பனையாகின்றது

வேலுப்பிள்ளை அன்பழகன் ஆசிரியர் அவர்களது தரம் 5-புலமைப்பரிசில் பரீட்சை மாணவர் களுக்கான பரீட்சை மாதிரிவினாத் தாள்கள் (15 நாட்களுக்குள் 1வினாத் தாள்)அத்துடன் கட்டுரைப் பொத்தகம் பரீட்சை வழிகாட்டி 2004 ஆம் வருட புதிய வெளியீடு, பாடசாலைகளுக்கு சிறப்பான கழிவு, கிடைக்குமிடம் வன்னியில் எமது விற்பனை முகவர் பிள்ளையார் பொத்தகசாலை, கிளிநொச்சி. (சி.11599)

மணமகன் தேவை

யாழ்இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த 1973 இல் பிறந்த 8 செவ்வாய் உள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. தகுதி தராதரம் பெரிதாக எதிர்பார்க்கப் படமாட்டாது. ஏனைய யாவும் நேரில பேசித் தீர்மானிக்கலாம். தொடாபுகளுக்கு:- 0112458073, 2227917 (5373)

விற்பனை நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்துவைத்துள்ளது. சங்கத் தலைவர் சூ.சிறில் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

உள்ளூர் உற்பத்தி நிலையத்தை வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இ.இளங் கோவன் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார்.

கூட்டுறவுத் திணைக்கள அதி காரிகள் சங்கத்தின் இயக்குனர்கள், சங்கப் பணிப்பாளர்கள் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த விற்பனை நிலையம் சங்கத்தின் தலைமைக்காரியாலய கீழ்மாடி வர்த்தக நிலையக் கட்டடப் பகுதியில் திறக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் மரக்கறி, என்பன விற்பனைக்கு வைக் கப்பட்டுள்ளன.

விஞ்ஞான பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

அறிவித்தல்

விஞ்ஞான பீடத்தின் 2004/2005ஆம் ஆண்டுக் கான கல்விச் செயற் பாடுகள் முன்னர் அறிவித்த படி 18.04.2005 ஆம் திகதி ஆரம்பமாகமாட் டாது. புதிதாகஅனுமதி பெற்ற மாணவர்கள் உட்பட சகல மாணவர் களதும் 2004/2005 ஆம் ஆண்டுக்கான கல்விச் செயற்பாடுகள் 04.05.2005 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்என்பதை அறியத்தருகின்றேன்.

துணைவேந்தர்

(சி.11635)

சர்வதேச நியதிகளுக்கு உட்பட்டதான கௌரவமான அரசியல்தீர்வை பெற்றுத்தருக!

~சர்வதேசநாடுகளிடம் கிளி.வெகுசனஅமைப்புக்களின்ஒன்றியம் மகஜர்

(அலுவலக செய்தியாளர்)

உலகில் இனப் பிணக் குகளுக்குள்ளான தேசிய இனங் களுக்கு என வகுக்கப்பட்டிருக்கும் சர்வதேச நியதிகளுக்கு உட்பட கௌரவமான அரசியல் தீர்வினை சிறிலங்கா அரசினூடாகா பெற்றுத் தருவதற்கு சர்வதேச சமூகத்தின் தார்மீக செயல்முறையை எதிர்பார்க் கின்றோம். என கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் சர்வதேச நாடுகளிடம் கோரியுள்ளது.

நேற்றுக் கிளிநொச்சியில் இடம் பெற்ற மாபெரும் ஜனநாயக முறை யிலான பேரணியின் முடிவில் சர்வதேச நாட்டுத் தலைவர்களுக்கு சமர்ப்பித்த மகஜரிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

ஏற்கனவே தளர்ந்து போயுள்ள சமாதானச் சூழ்நிலைக்குப் பலம் சேர்க்கும் வகையில் சுனாமிக்குப் பின்னரான மீள்புனர்வாழ்வு, மீள் புனர மைப்பிற்கென அரசும் புலிகளும் இணைந்த பொதுக்கட்டமைப்பினை தமிழ் தரப்பு சிறிலங்கா அரசிடம் கோரி நின்றது. எமது மக்கள் 20 வருடகால யுத்தத்தினாலும், சுனாமியின் பெரும் தாக்கத்தினாலும் பாரிய வாழ்வியல் அவலங்களைச் சந்தித்து நிற்கும் வேளை அரசு பொதுக் கட்டமைப்புக்கோரிக்கையை ஏற்பது போல சர்வதேச சமூகத்திற்கு காட்டிக் கொண்டு காலங்கடத்துவதன் மூலம் இவ் அனர்த்த முகாமைத்துவ பொதுக் கட்டமைப்புக் கோரிக்கையினையும் புறந்தள்ளும் வகையில் செயலாற்றி வருகிறது.

சுனாமித் தாக்கம் நிகழ்ந்து 100 நாட்கள் கடந்துவிட்ட நிலையில் சர்வதேச சமூகத்தினால் சிறிலங்கா அரசிற்கு வழங்கிய சுனாமி நிவாரண உதவிகள் எதுவும் தமிழர் தாயகத்தில் அவலப்படும் எம்மக்களை வந்தடைய வில்லை என்பது வேதனைக் குரியதாகும். அது மாத்திரமன்றி சுனாமி யால் பாரிய தாக்கத்திற்கு உள்ளான இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் திட்டமிடப்பட்ட முறையில் அரச புல னாய்வுப் பிரிவினர் தமிழர்தரப்புப் பிரதி நிதிகளான புலிப்போராளிகள் மீது மேற்கொண்டு வரும் தாக்குதல்களும், தாக்குதல் முயற்சிகளும் தமிழ் மக்களின் எதிர்ப்புக்களை ஏமாற்ற மடையச்செய்திருக்கிறது. கூடவே சமாதான முயற்சிகள் சுனாமிப் பொதுக் கட்டமைப்புயுத்த நிறுத்த உடன்படிக்கை போன்ற ஏற்பாடுகள் மீது நம்பிக்கை யீனத்தையும் கேள்விகளையும் உருவாக்கச்செய்துள்ளது.

எனவே கடந்த மூன்று வருட கால மாக உலக அரசுகளினதும் சர்வதேச ஸ்தாபனங்களினதும் எதிர்பார்ப்புக்கு அமைவாக நாகரிகமான தீர்வு முயற்சி களில் ஈடுபட்டு வந்த தமிழ் மக்களு டைய இன்றைய கையறு நிலையை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும் என தமிழ் பேசும் மக்க ளாகிய நாம் எதிர்பார்க்கிறோம்.

இம்மனுவைத் தகுந்த முறையில் பரிசீலனை செய்து தங்களின் தார்மீக கடமைகளைச் சரிவர ஆற்று வீர்களேயானால் சிறிலங்கா அரசின் இன்னுமொரு கொடிய யுத்தத்துள் இருந்து தமிழ்மக்கள் பாதுகாக்கப் படுவர்கள் என்பதே யதார்த்தமானதாகும் சமாதானத் தீர்வின் மீது உயர்ந்த நம்பிக்கை உள்ள எமது இனத்துக்கு அரசியல் நீதி பெற்றுத்தருமாறுகேட்டுக் கொள்கின்றோம் என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு.ச)

திருட்டுஅதிகரிப்பு

தென்மராட்சியின் நுணாவில் பிரதேசத்தில் அண்மைக்காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித் துள்ளனர்.

மக்களின் இயல்பான வாழ்விற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்திவரும் இத்தகைய திருட்டுச்சம்பவங்கள் குறித்து சிறிலங்கா பொலிசாருக்கு முறைப் பாடு செய்துள்ள போதும் அவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்காமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, திருகோண மலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் புதிதாக நியமனம் பெற்று கடமையாற்றும் கடல்வள ஆசிரியர்களுக்கான ஆசி ரியர் பயிற்சிக்கலாசாலை விண் ணப்பம் தொடர்பான கலந்து ரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணி யளவில் நாவலர் வீதியில் அமைந் துள்ள பிறைற்றின் கல்வி நிலை யத்தில் நடைபெறவுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது.

தொழிற்சாலைக் கட்டடம் இடிந்து வீழ்ந்தது 73 பேர் பலி; பலர் உயிருக்குப் போராட்டம்



(டாக்கா)

பங்களாதேசில் ஆடைத் தொழிற் சாலைக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 73 தொழிலாளர்கள் பலியாகினா; நூற்றுக்கணக்கானோர் காயமடைந் தனா.

பங்களாதேசின் தலைநகர் டாக்கா அருகே பலஸ்பரி என்ற இடத்தில் ஆயத்த ஆடை தொழிற்சாலை உள்ளது. ஒன்பது மாடிக் கட்டடத் தில் கடந்த ஞாயிறன்று இரவு 500இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். நள்ளிரவில் திடீரென்று கட்டடம் இடிந்து விழுந்தது. இதில் இடிபாடுகளில் சிக்கிய 73 தொழிலாளர் கள் பலியானார் கள். பலர் படுகாயமடைந்தனர்.

நேற்று இரண்டாவது நாளாக இடிபாடுகளை அகற்றும் பணி நடந்து வருகிறது ஒன்பது மாடிக் கட்ட டத்தில் இருந்த இயந்திரங்களுக்கு



அடியில் தொழிலாளர்கள் சிக்கி இருப்பதால் தொழிலாளர்களை மீட் பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது இதனால் 500 இற்கும் மேற்பட்டவர்கள இடிபாடு களில் சிக்கி இருப்பதாக ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சீனாவில் பெண்கள் போராட்டம்; கலவரத்தில் பொலிசார் பலர் காயம்

(பீஜீங்)

சீனாவில் போராட்டம் நடத்திய பெண்களைக் கலைக்க முற்பட்டதால் ஏற்பட்ட கலவரத்தில் பல பொலிசார் படுகாயமடைந்தனர்.

சீனாவின் கிராமப்புறங்களில் நிலவும் வருமான ஏற்றத்தாழ்வு மற்றும் லஞ்சம் காரணமாக அடிக்கடி போராட்டம் நடப்பது வாடிக்கையாகி வருகிறது ஜெஜியாங் மாகாணத்தில் இரசாயனத் தொழிற்சாலைக் கழிவுகளால் விளைநிலங்கள் மாசடைந்தன. இதனை எதிர்த்து ஹுவான்கான்டோக் கிராமத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு போராட்டத்தில் குதித்தனர். 200 பெண்கள் போராட்டத்தை முன்னின்று நடத்தினர்.

போராட்டக்காரர்களைக் கைது செய்ய இரவோடு இரவாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதில் இரு பெண்கள் பலியாகினர் ஆயிரக்கணக்கான பொலிசார் மற்றும் துணை இராணுவப்படையினர் ஆர்ப்பாட்டக்காரரை அடக்க முற்பட்டனர் இதனால் ஆத்திரமுற்ற போராட்டக்காரர்கள் அவர்களை வழிமறித்துத் தாக்கியதில் பல பொலிசார் படுகாயமடைந்தனர். சில பொலிசார் சீருடைகளைக் கழற்றி வீசி விட்டு, மக்களுடன் இணைந்து உயிர் தப்பினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.



பாகிஸ்தான் தூதரக அதிகாரி மாலிக் முகமது ஜாவீது கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார். அவரது படத்தைப் (புகைப்படத்தின் நடுவில் இருப்பவர்) மிகுந்த சோகத்துடன் இஸ்லாமபாத்தில் திங்கட்கிழமை நிருபர்களுக்கு காட்டுகிறார். மனைவி அஸ்மா பீபி (இடது) உடன் ஜாவீதின் தாய் ரஸியா பீவி (நடுவில்) தந்தை மாலிக் அஸ்லாம்.

அமெரிக்க ராணுவத் தளம் மீது ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்

(பாக்தாத்)

சிரியாவின் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவ தளம் மீது நேற்று முன்தினம் தற்கொலைத்தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது இதன்போது இரண்டு படையினர் காயமடைந் துள்ளனர்

சதாம்ஹுசைன் கைது செய்யப் பட்ட பின்னர் ஈராக்கில் அமெரிக்க ஆதரவில் அரசு அமைக்கப்ட் டுள்ளது. அமெரிக்க படைகளையும் இராணு வத்தளங் களையும் குறிவைத்து சதாம்ஹுசை னின் ஆதரவாளர்கள் தற்கொலைப் படைத்தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.


சிரியாவின் எல்லையில் அமைந் துள்ள அல்-கொய்ம் நகரில். அமெ ரிக்க இராணுவத்தளமுள்ளது இங்கு நேற்று முன்தினம் மூன்று கார்களில் வெடிகுண்டுகளுடன் தற் கொலை படையினர் தாக்குதல் நடத்தினார்கள எனத் தெரிவிக் கப்படுகின்றது. இதில இரண்டு அமெரிக்க வீரர்கள் படுகாய மடைந்தனர்.

இது பற்றி அமெரிக்க கடற்படை பெண் அதிகாரி கேத் வேன்டென் போக் கூறுகையில்; மூன்று கார் களில் வந்தவர்கள் இராணுவத் தினின தடுப்பை மீறி வேகமாக வந்து தளத் தில் மோதினார்கள் இதில் ஈராக் இராணுவ வீரர்க ளும் காயமடைந் துள்ளனர். அல்-கொய்ம் நகர் சிரியா வின் அருகில் இருப்பதால் தீவிரவா திகள் பலர் ஊடுருவி தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இங்கிலாந்தின் பிரதமராக மீண்டும் பிளேயர்; கருத்துக்கணிப்புக்கள் தெரிவிப்பு

(லண்டன்)

இங்கிலாந்தின் தற்போதைய பிரதமர் டொனிபிளேயருக்கு மீண்டும் பிரத மராகும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாகக் கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.



இங்கிலாந்தின் பிரதமராக தொழி லாளர் கட்சியைச் சேர்ந்த டொனி பிளேயர் இருந்து வருகிறார். அடுத்த மாதம் ஐந்தாம் திகதி அங்கு பாராளுமன்ற தேர்தல் நடக்கிறது.

இதையொட்டி நடத்திய கருத்துக் கணிப்பில் பெரும்பாலான மக்கள் மீண்டும் டொனி பிளேயர் பிரதமராக ஆதரவு தெரிவித்துள்ளனர். தொழி லாளர் கட்சிக்கு 38 சதவீ தமும்,கன்சர்லேட்டிவ் கட்சிக்கு 32 சதவீதமும்,லிபரல்டெமாக்ரட்ஸ் கட்சிக்கு 21 சதவீதமும்மக்கள ஆதரவு அளித்துள்ளனர்.

ஈராக் போர் மற்றும் பொருளாதார விவகாரங்களில் டோனி பிளேயரின் நடவடிக்கைகள் மக்களைக் கவர்ந்த தால் 97, 2001 ஆண்டு நடந்த தேர்த லில் பிளேயர் வெற்றி பெற்றார். தற் போது பிளேயர் வெற்றி பெற்று பிரத மரானால் மூன்றாவது முறை பிரத மரான பெருமையைப் பெறுவர். ஏற் கனவே கன்சர் லேட்டிவ் கட்சியைச் சேர்ந்த மார்க்கெரட் தட்சர் மூன்று முறை இங்கிலாந்துப் பிரதமராக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்

மறைந்த போப்பின் இடத்தை வெராலும் நிரப்பமுடியாது

(வத்திக்கான்)

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவராக இருந்த போப் இரண்டாம் ஜோன்போல்,26 ஆண்டுகள் போப்பாக இருந்த அவரது உயர்ந்த எண்ணங் களால் உலகம் முழுக்க இளைஞர் களைக் கவர்ந்தார். அவரது மறைவு போப்பின் ரசிகர்களுக்குப் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாம்.

இவரது மறைவு குறித்து ரசிகர் கள் சிலர் கூறுகையில்,"போப் ஜோன் போல் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது. புதிய போப்பாக யார் வந் தாலும் அவர்களை ஏற்றுக்கொள்ள நீண்ட நாள் ஆகும். கோடை காலத்தில் தவறாமல் வத்திக்கான் நகரம் வந்து போப் பாண்டவரிடம் ஆசி பெற்று வருவோம்" என்று தெரிவித்தனர்.

ஜப்பானில் பயங்கர நிலநடுக்கம் சுனாமி பீதி எதுவும் இல்லை

(டோக்கியோ)

ஜப்பானில் நேற்று முன்தினம் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. எனினும் சுனாமி எச்சரிக்கை எதுவும் அறிவிக் கப்படவில்லை. பத்து வினாடிகள் நிலநடுக்கம் இருந்தாலும், பொருட் கள் எதுவும் கீழே விழவில்லை. ஆடவில்லை,பொருட்சேதம் எதுவும் இல்லை என்று சிபா பகுதி மக்கள் உறுதிப்படுத்தினர்.

உலகில் நிலநடுக்கத்தால் அதிகம் பாதிக்கப்படும் நாடுகளில் ஜப்பானும் முக்கிய இடம் பெற்றுள் ளது. உலகில் ஏற்படும் நிலநடுக்கங் களில் 20 சதவீத நிலநடுக்கம் ஜப்பானில் ஏற்படுவதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ரிச்டர் அளவில் 6.1 எனப் பதிவான இவ் நில நடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடி யாகத் தகவல் வெளியிடவில்லை. நரிடா சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை உடனடியாக மூடப்பட்டு சிறிது நேரத்தில் மீண்டும் திறக் கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புகையிரதப் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. டோக்கியோவின் வட கிழக்கில் 60.கி.மீ தொலைவில் சிபா என்ற இடத்திலும் காலை 7.22 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் சுனாமி எச்சரிக்கை எதுவும் அறிவிக் கப்படவில்லை.

புதிய போப்பாண்டவராக வரப்போபவர் யார்? ஊகங்களுடன் காத்திருக்கும் கிறிஸ்தவர்கள்

புதிய போப்பாண்டவராக வரப்போகிறவர் யார் என்பது குறித்த பல்வேறு ஊகங்களுடனும். எதிர்பார்ப் புடனும் உலக கத்தோலிக்க கிறிஸ்த வர்கள் காத்திருக்கின்றனர்.

புதிய போப்பாண்டவரைத் தேர்ந் தெடுக்க ஏப்ரல் 18 ஆம் திகதி உயர் மதக்குருக்களான கர்தினால்களின் கூட்டம் நடைபெறவுள்ளது 117 பேர் அதில் வாக்களிக்கவுள்ளனர். அவர் களில் யாராவது ஒருவர்தான் போப் பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்படுவர். "வேட்பாளர்" என்று யாரையும் வெளிப் படையாக முன்னிறுத்தாமல் அவர் கள் தமக்குள்ளாகவே ஒருவரைத் தெரிவுசெய்வதுதான் பாரம்பரிய நடைமுறை. அத்தேர்வு மிகவும் ரகசி யமான முறையில் நடைபெறும். எனினும் மிகப் பிரபலமாக உள்ள கர்தினால்களில் போப்பாண்டவராகும். பாக்கியம் யாருக்கு இருக்கிறது என் பது குறித்து கத்தோலிக்க கிறிஸ் தவர்கள் மத்தியில் ஊகங்கள் நிலவு கின்றன. ஆனால் அது குறித்த எந்தக் கருத்தையும் வெளிப்படுத்து வதில்லை என்று கர்தினால்கள் உறுதி எடுத்துக்கொண்டுள்ளனர்.

போப்பாண்டவரின் ரோமைப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்தவர் கர்தினால் கெமில்லோ ருய்னி. போப் பாண்டவரின் மறைவுக்கு ஒன்பது நாட்கள் துக்கம் கடைபிடிக்கப்படு வதாக வத்திக்கான் அறிவித்ததை அடுத்து அந்த நாட்களில் பிற்பகலில் புனித பிற்றர்ஸ் பேராலயத்தில் கிறிஸ்தவர்களின் வழிபாடான " திருப்பலிப் பூசை" நடைபெற்றது. அதற்குத் தலைமையேற்று நடத்தி யவர் போப்பாண்டவராகும் வாய்ப்பு அவருக்கும் இருப்பதாக ஊகங்கள் நிலவுகின்றன. ஆனால்" அதற்கு உரிய நேரம் வரும் வரையில் மனி தனுக்கே உரிய ஆர்வத்துடன் பயனற்ற ஊகங்களில் நாம் ஈடுபட வேண்டாம். மாறாக இறைவனால் தேர்ந்தெடுக் கப்பட்டு நமக்கு அளிக்கப்படுபவரை நம்பிக்கையுடனும், அன்புடனும் ஏற்றுக்கொள்ள பிரார்த்தனையில் ஈடுபடுவோம்" என்று கூறியிருக்கிறார் கர்தினால் கெமில்லோ ருய்னி.

மத்திய இத்தாலியில் உள்ள சான் பெனடிட்டோ டெல் ட்ரான்டோ என்ற நகரைச் சேர்ந்த ரொமினா அபா தினி என்பவர் "புதிய போப்பாண்டவர் இத்தாலியராக இல்லாதிருந்தால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன்" என்று கூறினார். " ஏனென்றால் போலந்து நாட்டைச் சேர்ந்த போப்பாண்டவர் இரண்டாம் ஜோன்போல் தம் நாட்டுக் காக இவ்வளவு பணிகளைச் செய்வார் என்று நாம் எதிர்பார்த் தோமா? அதேபோல தென் அமெரிக் காவைச் சேர்ந்த ஒருவர் போப்பாண்ட வரானால் அவரும் அந்த நாடுகளுக் காக ஏராளமான பணிகளை நிறை வேற்றலாம்" என்றார் அவர்

முன்னாள் ரஷ்ய உளவு அமைப்பின் தலைவர் சுட்டுக் கொலை

முன்னாள் ரஷ்ய உளவு அமைப்பின் தலைவர் அனடோலி டிரோபிமோவ் (65) ஞாயிற்றுக்கிழமை இரவு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மொஸ்கோ நகரிலுள்ள அவரது குடியிருப்பு அருகே முகமூடி அணிந்து ம்ம நபர்கள் திடீரென வந்து அவரைச் சுட்டுக்கொன்றுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.இனந்தெரியாத நபர்கள் சுட்டத்தில் அனடோலிடிரோபிமோவின் மனைவி டாடியானா படுகாயமடைந்தார்.இவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் சோவியத் யூனியன் ரகசியப் பொலிஸ் படையின் விசாரணைக் குழுவின் தலைவராக அனடோலி டிரோபிமோவ் பணியாற்றியுள்ளார். அரசுக்கு எதிரான அதிருப்தியாளர்களைக் கைது செய்து விசாரிக்கும் பொறுப்பை அவர் வகித்துவந்தார்.

ஆப்கானில் கரும் பனி; 21 சிறுவர்கள் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் சீனா மற்றும் தஜிகிஸ்தான் எல்லையில் உள்ள படக்ஸ்தான் மாநிலத்தில் மூன்று அடி உயரத்துக்குப் பெய்த பனியால் 21 சிறுவர்கள் பலியாகியுள்ளனர். இதனால் 150 வீடுகள் சேதமடைந்ததாகவும் நூற்றுக்கணக்கான மிருகங்கள் இறந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

-வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

பகிடிவதை தொடர்பான ஒழுக்காற்று விசாரணை கல்லூரியில் ஆரம்பம்

(வவுனியா செய்தியாளர்)


வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற பகிடிவதை தொடர்பான ஒழுக்காற்று விசாரணை கல்லூரியில் ஆரம்பமாகியுள்ளது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி முதலாம் வருட ஆசிரியர் பயிலுநர்கள் மீது இரண்டாம் வருட ஆசிரியர் பயிலுநர்கள் மேற்கொண்ட மிக மோசமான பகிடிவதை தொடர்பான விசாரணைகளை கல்லூரி ஒழுக்காற்றுச்சபை ஆரம்பித்துள்ளது.

பகிடிவதையை மேற்கொண்ட இரண்டாம் வருட ஆசிரியர் பயிலுநர்களில் இனங்காணப்பட்ட ஆறு பேர் கல்லூரியில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளமை தெரிந்ததே. இவர்கள் ஆறு பேருக்கும் விசாரணைகளில் கலந்துகொள்ளுமாறு கல்லூரி ஒழுக்காற்றுச்சபை அறிவித்திருந்தபோதும், நால்வர் மட்டுமே விசாரணைக்கு சமுகமளித்திருந்தனர்.

விசாரணையின்போது இவர்கள் நால்வரும் தாம் பகிடிவதையை மேற்கொண்டமையை ஏற்றுக் கொண்டனர். இவர்கள் மீது மேற்கொள்ளப்படவேண்டிய சட்ட நடவடிக்கை தொடர்பாக கல்லூரி ஒழுக்காற்றுச்சபை ஆராய்ந்து வருகின்றது.

இதேவேளை விசாரணைக்குச் சமூகமளிக்காத இருவருக்கும் இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டு மீண்டும் விசாரணைக்கான அழைப்புக் கடிதம அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (10)



1988ஆம் ஆண்டு இந்தியப் படையினரால் எரிக்கப்பட்ட முத்துஐயன்கட்டு உப தபாலகம் இன்று வரையும் புனரமைக்கப்படாத நிலையில் இடிந்த கட்டடத்துடன் இயங்கு வதைப் படத்தில் காணலாம். (படம்-குகன்)

லண்டனில் ஒன்பது மாதங்களில் 68 தமிழ் இளைஞர்கள் கைது

லண்டன் பொலிசாரினால் கடந்த ஒன்பது மாதங்களில் 68 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

லண்டன் பொலிசாரினால் 14 முகவரிகள் சோதனையிடப்பட்டு இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

இவர்களிடமிருந்து கடன் அட்டைகள் மற்றும் அதனை மாற்றியமைக்கும் சாதனம் பி எம் டபிள்யு ரக வாகனங்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை இவர்களில் சிலரால் 22 மில்லியன் பவுண் மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

சுமார் 500 தமிழ் இளைஞர்களின் தகவல்கள் லண்டன் பொலிசாரால் திரட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான தொழில்சார் கல்வி வழிகாட்டல் ஆற்றல் மேம்படுத்துகை பயிற்சிப் பட்டறை

மொறட்டுவ பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றத்தினரால் மாணவர்கள் தொழில்சார் கல்வி வழிகாட்டல் ஆற்றல் மேம்படுத்தும் பயிற்சிப்பட்டறை நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு மு/மல்லாவி மத்தியகல்லூரியில் மொறட்டுவ பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றத்தலைவர் ச.சர்வதாஸ் தலைமையில் ஆரம்பமானது.

இந்நிகழ்வின் மங்கல விளக்கினை துணுக்காய்கோட்டக் கல்வி அதிகாரி ஆ.சுந்தரமூர்த்தி ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை துணுக்காய் வலயக் கல்விக்கழகப் பொறுப்பாளர் சுடர் ஏற்றிவைத்தார். பாடசாலைக்கொடியினை கல்லூரி முதல்வர் திருமதி. பாலசுப்பிரமணியம் ஏற்றினார். தொடர்ந்து ஆசியுரைகளை துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குருஸ், துணுக்காய் கல்விக் கழகப் பொறுப்பாளர் மா.சுடர், துணுகாய் கோட்டக் கல்வி அதிகாரி, ஆசிந்த மூர்த்தி, கல்லூரி முதல்வர் திருமதி. பு.புஸ்பராணி ஆகியோர் நிகழ்த்தினர். இப்பயிற்சிப் பட்டறையில் துணுக்காய் கோட்ட உயர்தர மாணவர்கள் பங்குபற்றினர். (24)



மாங்குளத்திலிருந்து ஒட்டுசுட்டான் செல்லும் பிரதான வீதியில் பாரவூர்தி ஒன்று குடைசாய்ந்தது. ஞாயிறன்று மாலை குடைசாய்ந்த இப்பாரவூர்தி மறுநாள் காலையில் பாரம் தூக்கி மூலம் மீட்கப்பட்டது. சாரதி காயங்கள் ஏதுமின்றி தப்பியுள்ளார். (படம்-குகன்)

கசிப்பு உற்பத்தியாளருக்கு ஒரு வருடச் சிறைத்தண்டனை

(மல்லாவி)

சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுவந்த நபரொருவருக்கு மல்லாவி மாவட்ட நீதிமன்ற நீதியாளர் ஒரு வருடச் சிறைத்தண்டனை வழங்கியதோடு, பத்தாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

மல்லாவி யோகபுரம் மத்தியில் கற்குவாரி எனுமிடத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர் அண்மையில் துணுக்காய் காவல்துறைப் பணிமனையினரால் கைது செய்யப்பட்டதுடன் கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட்டிருந்தன. மேற்படி சந்தேக நபர் மல்லாவி தமிழீழ மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு ஒரு வருட சிறையும், பத்தாயிரம் ரூபா குற்றப் பணமும் அறவிடபபட்டுள்ளது. மேற்படி தீர்ப்பினை நேற்று முன்தினம் மல்லாவி மாவட்ட நீதியாளர் செல்வி. மங்களேஸ் வழங்கியுள்ளார். (24)

பட்டப்பகலில் திருடப்பட்ட நகைகள் காவல்துறையினரால் மீட்பு

(மல்லாவி)

மல்லாவி நமனங்குளம் பகுதியில் பகல்வேளையில் திருடப்பட்ட தங்கநகைகள் காவல்துறையினர் மேற்கொண்ட துரிதநடவடிக்கையையடுத்து மீட்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை 48 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கநகைகள் களவாடப்பட்டதையடுத்து, வீட்டின் உரிமையாளர் துணுக்காய் காவல் துறையினரிடம் புகார் செய்துள்ளார். இதனைத்தொடர்ந்து கனகராயன் குளத்தில் ஒருவரின் வீட்டில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த தங்க நகைகளை மாங்குளம் காவல்துறையினர் மீட்டு துணுக்காய் காவல்துறை பணிமனையில் ஒப்படைத்தனர். இதனையடுத்து நகைகளை மல்லாவி மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.(24)

கிளி.வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் சிறப்புற நடந்த பொன் விழா நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலய பொன்விழாவும், புதியகட்டடத்திறப்பு விழாவும் நேற்று முன்தினம் பிற்பகல் 4.00 மணிக்கு வன்னேரிக்குளம் மகாவித்தியாலய முதல்வர் சு.தர்மரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான மேற்படி நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியினை அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ச.திருமாறன் ஏற்றிவைக்க மகாவித்தியாலயக் கொடியினை மகாவித்தியாலய முதல்வர் ஏற்றி வைத்தார். அகவணக்கத்தினைத் தொடர்ந்து தியாகதீபம் அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை கிளி.கோட்ட அரசியல துறைப்பொறுப்பாளர் ஏற்றிவைத்தார்.

அடுத்து புதிய கட்டடத்திறப்பு விழா நிகழ்வு இடம்பெற்றது. புதிய நூலகக்கட்டடத்தினை கிளி.மாவட்ட அரசஅதிபர் தி.இராசநாயகமும், விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கான கட்டடத்தினை கிளி.மாவட்ட பிரதி மாகாண சுகாதாரசேவைப் பணிப் பாளர் த.சத்தியமூர்த்தியும், சங்கீத பாடநெறி கட்டடத்தினை முல்லை. வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினமும், செயற்பாட்டறையினை கிளி.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலர் சு.பசுபதிப்பிள்ளையும், சம்பிருதாயபூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்துவைத்தனர்.

அடுத்து சிறப்புற அமைக்கப் பெற்ற மேடையில் பொன்விழா நிகழ்வுகள் இடம்பெற்றது. தலைமையுரையினையடுத்து சிறப்புரையினை கிளி.மாவட்ட அரசஅதிபர், கிளி.மாவட்ட பி.மா.சு.சே. பணிப்பாளர், கிளி.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர், கிருஷ்ணபிள்ளை, கிளி.வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராசா ஆகியோர் நிகழ்தினர். அடுத்து முதன்மைவிருந்தினராகக் கலந்துகொண்ட கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் பொன்விழா நூல் முதற்பிரதியினை வெளியிட்டு வைக்க, மகாவித்தியாலயத்தின் முதல் மாணவனான ச.கிருஷ்ண பிளளை பெற்றுக்கொண்டார். அடுத்து சிறப்புப் பிரதிகளை முல்லை.வலயக கல்விப்பணிப்பாளர், கரைச்சிப் பிரதேச செயலர் செல்வி. க.சுலோஜினி, டாக்டர் முருகானந்தன் ஆகியோர் வழங்கி வைத்தனர். அடுத்து நூலறிமுக உரை,பதிலுரை என்பன இடம் பெற்றது.

தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வுகள், கலைநிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)



ஆடுகளுக்கு தடுப்பு மருந்து வழங்கல்

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள வசந்தபுரம் கிராமத்தில் ஆடு களுக்குத் தடுப்பு மருந்து வழங் கப்பட்டுள்ளது.

கெயார், எக்கோ நிறுவனத் திட்டத்தின் கீழ் 28/03/2005 அன்று முல்லை மாவட்ட பெண் கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் இத்தடுப்பு மருந்து வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் கிராமசேவையாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். இதன் போது கருத்துரைகளும் வழங்கப்பட்டது. மேலும் கால் நடைதிணைக்கள உத்தியோகத தினரால் மருந்துபயன்படுத்து தல் நோய்கண்டு பிடித்தல் போன்ற விடயம் தொடர்பான பயிற்சி வகுப்புக்களும் இடம்பெற்றது.

நாவாந்துறை மக்களால் துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசமான கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி மக்களுக்கு அருட்தந்தை எம்.எச் கருணாரட்னம் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் நாவாந்துறைப் பகுதி மக்களால் 50 துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இந்நிகழ்வு வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் கவிக்குயில் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அருட்தந்தையின்சிறப்பு உரையினையடுத்து துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. முதலாவது துவிச்சக்கர வண்டியை அருட்தந்தை அவர்கள் வழங்கினார். தொடர்ந்து அருட்சகோதரி பங்கு சபைத் தலைவர்கள் வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவன் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

தென்மராட்சியில் நேற்று நடந்த பேரணியில்....











படங்கள்:-ஆன்சிலின்,தயாபரன்

உண்மையான சமாதானமும் இயல்பு வாழ்வும் எம்மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்!

–தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள்

(தென்மராட்சி)

உண்மையான சமாதானமும் இயல்பு வாழ்க்கையும் எம்மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. நேற்று சாவகச்சேரியில் இடம்பெற்ற மாபெரும் பேரணியின் முடிவில் சிறிலங்கா சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட மகஜரிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இடைக்காலத் தன்னாட்சி அமைப்பு வழங்கப்படவேண்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களின் புனர் வாழ்வு புனர்நிர்மாணப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படல் வேண்டும்.

போராளிகள் தாக்கப்படுவதும், படுகொலை செய்யப்படுவதும் நிறுத்தப்படல் வேண்டும்.

யுத்தத்தினால் இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கு நிறுத்தப்பட்ட நிவாரண உதவிகள் அவர்களின் இயல்பு வாழ்க்கை திரும்பும் வரை தொடர்ந்து வழங்கப்படுதல் வேண்டும்.

தென்மராட்சி பிரதேசக் கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாகத் தமது தொழிலை மேற்கொள்ள அனுமதிக்கப்படல் வேண்டும்.

எம்மக்களின் நிலைத்த இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கான காத்திரமான முயற்சிகள் எடுக்கப்படவில்லை. பதிலாக எம்மக்கள் மீதான கட்டுப்பாடுகளும், தடைகளும், அச்சுறுத்தல்களும் அதிகரிக்கின்றன. அவர்களின் வாழ்வாதாரங்கள் தடுக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் பாதுகாப்புச் சக்தியான விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல்கள், கொலைகள் அதிகரிக்கப்படுகின்றன. மீண்டும் ஒரு யுத்தத்திற்கான ஆயத்தங்களும் புலிகளை வலிந்து இழுக்கும் முயற்சிகளும் சிறிலங்கா அரசினாலும் இராணுவத்தாலும் அரங்கேற்றப்படுவதாக எமது மக்கள் கருதுகின்றனர்.

தென்மராட்சியில் 2000 ஆம் ஆண்டு நிகழ்ந்த பாரிய யுத்தத்தினால் எமது பிரதேசம் முற்றாக அழிந்தமை உலகறிந்த விடயம். 2002 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்தவர்களுள் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஒரு தொகுதி குடும்பங்களுக்கு 25000 ரூபா வழங்கப்பட்டது. அரச பணியாளர் உட்பட ஏனையோர்க்கு எந்தவிதமான கொடுப்பனவுகளும் இன்னும் வழங்கப்படவில்லை. 25000 ரூபா வழங்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இருப்பிடம் உட்படச் சகல உடமைகளையும் இழந்த இம்மக்களுக்கு வழங்கப்பட்ட 25000 ரூபா அவர்களின் அன்றாடப் பாவனைப் பொருட்களை வாங்குவதற்கே போதுமானதாக இல்லாத விடத்து அதன் மூலம் அவர்கள் தமது வாழ் வுக்கான வருமானத்தை எவ்வாறு பெறமுடியுமென அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

தேசியஅடையாள அட்டைகளைப் பெறுவதற்காக விண்ணப்பித்த மாணவர்களில் ஒரு தொகுதியினருக்கான அடையாளஅட்டைகள் வந்து சேர்ந்துள்ளன.

யாழ்.மாவட்ட பாடசாலைகளூடாக விண்ணப்பித்த மாணவர்களது அடையாள அட்டைகளே இவ்வாறு வந்து சேர்ந்துள்ளதாக யாழ். மாவட்ட ஆட்பதிவுத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.இவற்றை உரிய பாடசாலைகளூடாக மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதால் சம்பந்தப்பட்ட பாடசாலைக

கணினி அன்பளிப்பு

கரவெட்டி யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்திற்கு எழுபதாயிரம் ரூபா பெறுமதியான கணினித் தொகுதி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

வித்தியாலய அதிபர் வ.கணபதிப்பிள்ளை தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் கரவெட்டியைச் சேர்ந்த ஐயாத்துரை மார்க்கண்டு என்பவரே இக் கணினித் தொகுதியை அன்பளிப்புச் செய்துள்ளார். (கா)

ளின் அதிபர், ஆசிரியர்கள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

கௌரவிப்பு

கரவெட்டி கிழக்கு யார்க்கரு விநாயகர் ஆலயத்தின் மகோற்சவ வைபவங்களில் கடந்த பல ஆண்டுகளாக பிரதம குருவாக கிரியைகளை நடத்தியமைக்காக அவ் ஆலயக்குரு "சாரதாபீட சபாநாதக் குருக்களுக்கு தேவஸ்தான சபையினரால் "சிவாச்சாரியார் திலகம்" எனும் கௌரவிப்புப் பட்டமும், பதக்கமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

வடமராட்சி பகுதிகளின் முன்னணிச் சொற்பொழிவாளர்களில் ஒருவரான நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் ஆறுமுகம் சிவநாதன் அவர்களுக்கு "கதாகான வாரிதி" எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வானது ஆலய தீர்தோற்சவ நாளில் இந்து மதக் குருமாரின் சிபார்சுடன் தீட்சாகுரு யோகீஸ்வரக் குருக்களின் ஆசியுடன் நடைபெற்றது. (கா)

கால்நடைகள் திருட்டு காரைநகரில் அதிகரிப்பு

(காரைநகர்)

யாழ்.காரைநகர் பகுதியில் கால்நடைகளைத் திருடிச் சென்று அவற்றை இறைச்சியாக்கி விற்பனை செய்யும் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாகக் கால்நடைகளை வளர்ப்போர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான கால்நடை திருட்டு நடவடிக்கைகள் குறித்து அப்பகுதி வாழ் மக்கள் பொலிசாரிடம் முறையிட்டுள்ள போதும் இது குறித்து அவர்கள் அலட்சியப்போக்கைக் கடைப்பிடித்து வருவதனால் காரைநகரைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். (33)

சுகாதாரச் சீர்கேடு

(வடமராட்சி)

பருத்தித்துறை இரண்டாம் குறுக்கு வீதியில் கொட்டப்பட்டுள்ள கழிவுகளால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது. இக்கழிவுகள் தொடர்பாக பல தடவைகள் பருத்தித்துறை நகரசபையினருக்கு அறிவித்தும் அவை பல மாதங்களாக அகற்றப்படாமல் உள்ளது. அப்பகுதியிலுள்ள சிலர் பல்வேறு கழிவுகளையும், கால்நடைகளின் எச்சங்களையும் தொடர்ந்து அவ்விடத்தில் கொட்டி வருவதனால் அப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாகவும் அப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (சு)

புங்குடுதீவில் மீளக்குடியமர்ந்த மக்கள் அடிப்படை வசதி இல்லாது அவல நிலை

(புங்குடுதீவு)

யாழ்.புங்குடுதீவுப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் போதியளவு அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புக்கள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மேற்படி பிரதேசத்தில் தற்பொழுது சுமார் 5000 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

எனினும் இப்பகுதி மக்களின் நலன் கருதி இங்கு உரிய வைத்திய சேவைவசதிகள், தபால்தொலைத் தொடர்பு வசதிகள், அடிப்படை சுகாதாரம் பேணுவதற்கான வசதிகள், கல்வி மேம்பாட்டிற்கான வசதிகள், திருப்திகரமான பேருந்துப்போக்கு வரத்து வசதிகள், தொழிற்துறை, பொருளாதார மேம்பாட்டிற்கான வசதிகள் என்பன உரிய முறையில் ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை.

இதனால் இங்கு மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் பின்தங்கிப்போயுள்ளதாக அப்பகுதி பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (33)

சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு ஈருருளிகள் அன்பளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கும், மாணவர்களுக்கும் தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினரால் ஈருருளிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை முன்தினம் 10.30 மணிக்கு பருத்தித்துறை கடற்புலிகள் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் வடமராட்சியைச் சேர்ந்த ஐம்பத்தியெட்டுக் குடும்பங்களுக்கு இந்த ஈருருளிகள் வழங்கப்பட்டுள்ளன.

சுவிஸ் நாட்டில் வாழ்ந்து வரும் ஈழத்தமிழர் ஒருவர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலநிலை கண்டு தன்னாலான இந்த உதவியை வழங்குவதாகக் கூறினார். (சு)

ஒரு பெரிய நகரத்தின் மீது ஆயிரம் கிபிர் விமானங்கள் குறுகிய நேரத்தில் அடுக்கடுக்காக குண்டுகளை வீசினால் அந்த நகரம் எப்படி அழிந்து போயிருக்குமோ அதேபோலத்தான் முல்லைத்தீவின் நிலை இருந்தது. நீண்ட கால யுத்தத்துடன் தொடர்புபட்டவர்கள் என்பதால் இப்படியான தோற்றம் தான் எனக்குத் தெரிந்தது. கள்ளப்பாட்டுக் கிராமம் மிகவும் பயங்கரமாய் இருந்தது. கண்பார்வைக்கு எட்டிய தூரம்வரை வீடுகள் எதுவும் தெரியவில்லை. இந்த இடத்தில் ஒரு கிராமம் இருந்ததா? என்று கேட்கும் அளவுக்கு நிலைமை இருந்தது. சிதைந்துபோயிருந்த முல்லைத்தீவின் பெரும்பகுதியைப் பார்த்த நிலையில் மதியம் வரை எந்த உடலையும் நான் காணவில்லை. மதியத்தின் பின்னர் தான் கஞ்சல் நிறைந்திருந்த இடத்தில் ஒரு பதின்மூன்று வயதுச் சிறுமியின் உடலைக் கண்டேன். அந்த உடல் தான் நான் முல்லைத்தீவில் கண்ட முதலாவது உடல் என ஆழிப்பேரலையால் அழிந்து போயிருந்த முல்லைத்தீவு நகருக்குள் சென்றபோது தனது பார்வையில் பட்டவிடயங்களை எம்மிடம் பகிர்ந்திருந்தார் விடுதலைப்புலிகளின் மூத்த தபளதியும், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளருமான பொட்டு அம்மான் அவர்கள். அவர் பகிர்ந்தவற்றை இந்தப் பகுதியிலும் தருகின்றோம்.



ஆயிரம் கிபிர் விமானங்கள் குண்டு வீசி அழித்ததுபோல் முல்லைத்தீவின் நிலை இருந்தது



பகுதி-50

அ.லோகீசன்

அந்த இடஅமைப்பைப் பார்த்த வுடனேயே அதுக்குள்ள பிள்ளையள் இருந்த தால் தப்புறதுக்கு வாய்ப்பில்லை என்பது தெரிந்தது. ஏனென்றால் அந்த இல்லத்திற்கு பக்கத்தில் இருக்கிற ஆத்தினுடைய வாயோடைதான் அந்த இல்லமும் இருந்தது.

இப்படி இருக்க அதற்குள் போய் அந்தச் சின்னப்பிள்ளைகளை ஒவ்வொன்றாய் பார்க்கிற மனவலிமையும் எனக்கு இருக்கவில்லை. அதனால் மீட்பு வேலையில் இருந்த போராளிகளை அதைச் செய்புங்கோ என்று சொல்லி விட்டு முல்லைத்தீவு ரவுண்பக்கம் வந்தோம்.

அந்த இடத்தில்நின்று முல்லைத் தீவைப்பார்க்கின்றபோது ஆயிரம் கிபிர் விமானங்கள் ஒன்றாகச் சேர்ந்து குறுகிய நேரத்தில் குண்டு வீச்சைநடத்தினால் பெரியநகரம் எப்படி அழிந்திருக்குமோ அதைப்போல முல்லைத் தீவும் அழிவடைந்து காட்சி தந்தது. தொடர்ச்சியாக யுத்தத்துடன் தொடர்புபட்டவர்கள் என்பதனால் இப்படியான தோற்றம் தான் எனக்குத் தெரிந்தது.

அப்படியே எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்துக்கொண்டு கள்ளப்பாட்டுக் கிராமத்துக்கு இறுதியாகப் போனோம். கடற்படைச் சிறப்புத்தளபதி சூசை,நிதித் துறைப்பொறுப்பாளர் பாலதாஸ் எல்லோரும் ஒன்றாக இணைந்துதான் கள்ளப்பாட்டுக் கிராமத்தை பார்ப்பதற்காகப்போனோம்.

கள்ளப்பாட்டுக்கிராமத்திற்குள் நாங்கள் கால்வைக்கின்ற பொழுது மிகவும் பயங்கரமாக இருந்தது. அந்தக்கிராமத்தில் உயர்ந்து நின்ற பனைமரங்கள் நிலத்தில் சாய்ந்துபோய் வேருடன் கழுவப்பட்ட நிலையில் இருந்தன. கண்பார்வைக்கெட்டின தூரம்வரை வீடுகள் எதுவுமே தெரியவில்லை.

இந்த இடத்தில் ஒரு கிராமம் இருந்ததா? என்று கேட்கக்கூடியதாக அத்திவாரக்கட்டுடன் எல்லாமே அழிந்து கிடந்தன. பெரியபெரிய வீடுகள் எல்லாம் அலையுடன் எதிர்த்து நிற்கமுடியாமல் சிதைந்து போய் இருந்தன. வழமையாகத் தரைமட்டம் என்று சொல்வோம் ஆனால், அதைவிட மோசமாக இருந்தது.

நிலத்துக்குக் கீழாகஇருக்கின்ற மலசலகூடக்குழிகள் வெளியே தெரிந்து உயரமான இடத்தில் இருப்பதுபோல இருந்தது.அந்தளவுக்கு கடல்வந்து மண் ணைக்கழுவிக்கொண்டு போயிருந்தது. அதனால் அந்தக்குழிகள் மாத்திரம் தனியாக நிற்பது போலஇருந்தது. இதுவரை நாங்கள் பார்த்த அழிவுகளைவிட கள்ளப்பாட்டைப் பார்க்கின்ற பொழுதுதான் அலைத்தாக்கத்தின் வலிமையை கண்டோம்.

இந்த இடத்தில்நான் ஒன்றைச்சொல்லவேண்டும். பாதிக்கப்பட்டு சிதைந்துபோயிருந்த முல்லைத்தீவின் பெரும்பகுதியை பார்த்த நிலையில் மத்தியானம் வரை எந்த உடலையும் நான் காணவில்லை. ஒரு உடலைக்கூட நான் காணாதது எனக்குள்ளேயே ஒரு கேள்வியை எழுப்பியது. அதனால் என்னுடன் கூடவந்த வர்களிடம் "என்னடாப்பா ஒரு உடலையும் காணவில்லை?" என்று கேட்டபடி அந்தப் பகுதிகளை பார்த்து விட்டு நாங்கள் முன்னர் போனபாதையால் திரும்பி வருகின்ற பொழுது வீதி ஓரமாக இருக்கின்ற பனைமரம் ஒன்றைச்சுற்றி குப்பைகள் அடைந்திருந்தன.

அப்படிக்குவிந்திருந்த குப்பைகளை நான் வடிவாக உற்றுப் பார்த்தபடி வந்தேன். அதனுள் இருந்து சிறிய கை மாத்திரம் வெளியால் தெரிந்து கொண்டிருந்தது. அந்த உடல் ஒரு பதின்மூன்று வயது மதிக்கத்தக்க பிள்ளையின் உடல். இதுதான் அன்றைய தினத்தில் நான் முதலாவதாகக் கண்ட உடல்.

அதுவரை நாங்கள் உடல்களைக் காணவில்லை. ஏனென்றால் குப்பைகளுக்குள் ளும் மரங்களின் கீழும் கொண்டுபோய்த்தான் உடல்கள் மூடப்பட்டிருந்தன. எந்த உடலும் வெளியான பகுதியில் இருக்கவில்லை. அதனால் நாங்கள் வேகமாகப் போய்க்



கொண்டிருந்ததால் உடல்கள் எவையும் எங்களின் கண்களுக்கு எத்துப்படவில்லை. மதியத்தின் பிறகுதான் உடல்களை நான் கண்டேன்.

பனைமரங்களின் மிக உயரமான பகுதி களில் கூட உடைகள் தொங்கியபடி இருந்தன.இந்தநிலையில் நாங்கள் நிலத்தில் மட்டும் உடல்களை பார்க்காது மரங்களின் மேலும் உடல்களைத் தேடவேண்டிய நிலை வருமோ? என்று நினைத்தேன்.

கடல் இரண்டு பக்கமும் வருவதும் போவ துமாக இருந்தது. இந்த நிலைதான் எங்க ளது மீட்புப்பணியில் பெரும்சிக்கலை-பயங் கரத்தை ஏற்படுத்தியவிடயமாக இருந்தது.

உடல்களை உன்னிப்பாகத் தேடவேண்டும். அவ்வாறு தேடிக்கண்டுபிடிக்கிற உடல்களில் உயிர்இருகிறதா? இல்லையா? எனறு பார்க்கின்ற பொறுப்பான வேலையைச் செய்யவேண்டும். அதேநேரத்தில் சுனாமிவருகின்றதா? என் பதையும் தவறாமல் அதவானித்துக் கொண் டிருக்க வேண்டும். பிரதான சுனாமி அடித்து முடிந்துவிட்டது என்பது சுனாமிக்கு மாத்திரம் தான் தெரியும். அதன்பிறகு வருகின்ற அலை களையும் சுனாமியா? என்று பார்க்கவேண்டிய தேவை இருந்தது. இந்த நிலைதான் பெரும் சிக்கலைத் தந்தது.


அந்த பரபரப்பான சூழலில் தவறவிடப் பட்ட தங்கள் உறவுகளைத்தேடி மக்கள் அலைந்துகொண்டிருந்தனர். எனக்குத் தெரிந்த முல்லைத்தீவு கள்ளப்பாட்டைச்சேர்ந்த ஆசிரியர் ஒருவரைச் சந்தித்தோம். அவர் தனது வீட்டிலிருந்த குடும்பத்தினரின் நிலை என்ன என்பது தெரியாமல் திகைத்தபடி இருந்தார். நாங்கள் முல்லைத் தீவுக்குள் வரும் பொழுது அவரும் எங்களுடன் வந்து கள்ளப்பாட்டிற்குப் போய்விட்டார்.

ஏனைய இடங்கள் எல் லாவற்றையும் பார்த்துவிட்டு நாங்கள் கள்ளப் பாட்டுக்குப் போகின்ற பொழுது அவரைச் சந்தித் தோம். "என்ர வீடு எங்க இருந்தது எண்டுறதே தெரியேல்ல. அம்மா செத்துக்கிடக் கிறா மற்ற ஆக்கள் ஒருத்தரையும் காணேல்ல. எல்லா இடமும் தேடிப்பார்த்திட்டன்" என்று சொல்லியபடி எங்களுக்கு முன்னாலேயே ஓ.... என்று கத்திஅழ ஆரம்பித்துவிட்டார். அவரின் நிலையை அறிந்து தாயின் உடலை எடுப்ப தற்காக என்னுடன் வந்த போராளிகளை அனுப்பி விட்டேன். ஒன்பது பேர் கொண்ட அவரின் வீட்டில் தகப்பனாரை மட்டும் கால்முறிந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு போயிருப்பதாகவும், மற்றைய அனைவரும் இறந்து போய்விட்டதாகவும் பிறகு நாங்கள் அறிந்து கொண்டோம்.

மதியத்தின் பின்னர் அந்தப் பகுதியில் இருந்து நாங்கள் திரும்பி வந்துகொண்டிருக் கின்றபொழுது எங்களது பிரிவில் இருக்கின்ற பெண்போராளி ஒருவர் வந்தா. அவவின்ர வீடு செல்வபுரத்தில் இருந்தது. அந்த வீடு எனக்குத்தெரியும். அதால அந்தப் போராளி வீட்டில் நல்ல செய்திஇருக்காது என்பதை நான் ஊகித்துக்கொண்டு என்னுடன் வந்த வாகனம் ஒன்றை அவருக்கு குடுத்து "நீங்கள் மனதைத் தேற்றிக்கொள்ளவேண்டும். அங்கு துயரமான காட்சிகளைப் பார்வையிட்டு ஒழுங்கு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நிலையில் முல்லைத்தீவின் நிலைமைகளைச் சீர்செய்வதை நிதித்துறையினரும், மீட்பு நடவடிக்கை நிர்வாகத்தையும் மக்களை ஒருங்கிணைக்கின்ற நடவடிக்கைகள் எல்லா வற்றையும் கடற்படை சிறப்புத் தளபதி சூசையும் பொறுப்பேற்றுக் கொண்டதால் வடமராட்சிகிழக்குப் பகுதி அழிவுகளைப் பார்க்கவேண்டும், அறியவேண்டும் என்ற ஆதங்கம் எழுந்தது.

புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் அவர்கள் கடல் பேரலைகளால் தாக்கப்பட்டு உருக்குலைந்து போயிருந்த வடமராட்சி கிழக்கு மற்றும் முல்லை.நகர் குறித்துப் பகிர்ந்து கொண்ட விடயங்களின் மிகுதிப் பகுதி அடுத்த பகுதியில் பிரசுரமாகும்.

(தொடரும்....)



04.04.2005 - 10.04.2005



04.

☞ வடமராட்சி கிழக்கில் சுனாமியால் தமது தொழில் உபகரணங்களை இழந்த மீனவர்களுக்கு ஒரு தொகுதி கடற்தொழில் உபகரணங்கள் கையளிப்பு.

☞ இந்தியா - சிறிலங்காவிற்குமிடையிலான இராணுவ ஒப்பந்தம் ஏற்பட்ட வாய்ப்பே இல்லையென ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ.நெல்லை யில் செய்தியாளரிடம் தெரிவிப்பு.

☞ முல்லை வலய தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனம் வழங்கக்கோரி புதுக்குடியிருப்பில் மாபெரும் பேரணியில் ஈடுபட்டனர்.



☞ வடமராட்சி கிழக்கில் அமைக்கப்பட்ட தற்காலிகக் குடிமனைகளை நோர்வேத் தூதரகப் பிரதிநிதிகள் பார்வையிட்டனர்.

☞ டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சுப் பணிப்பாளர் மட்டக்களப்பில் சுட்டுக் கொலை.

☞ மட்டு.அம்பாறை மாவட்டங்களில் பெப்ரவரி முதலாம் திகதிக்கும் மார்ச் மூன்றாம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு கருணா குழுவே முழுப் பொறுப்பு என சனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் பொலிஸ் அதிகாரி சாட்சி.

05.

☞ திருமலை உப்பாற்றுப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தாக்குதல்கள் நடத்தியவாறு கரையோரத்தை அண்மித்த சிறிலங்கா கடற்படைப் படகு மீது புலிகள் தாக்குதல் நடத்தினர்.

☞ பெண்கள் மீதான பாலியல் பலாத்காரங்களை கண்டித்து மன்னாரில் ஆர்ப் பாட்டம்.

☞ அக்கரைப்பற்றில் ஈ.பி.ஆர்.எல். எப் உறுப்பினர் சுட்டுக்கொலை.

அக்கரைப்பற்றிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை செயலகத்தினுள் இராணுவம் அத்து மீறி நுழைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டது. இது அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் என புலிகள் கண்டனம் தெரிவிப்பு.

06


☞ ஒரு மகத்தான ஆன்மீகத் தலைவரை உலகம் இழந்து விட்டதென பரிசுத்த பாப்பரசரின் மறைவு குறித்து தேசியத்தலைவர் வெளியிட்ட இரங்கல் செய்தியில் தெரிவிப்பு.

☞ சுனாமி உதவி வழங்குதல் தொடர்பான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துதல் மற்றும் இடைக்கால நிர்வாகம் போன்ற விடயங்களில் சிறிலங்கா அரசாங்கம் காட்டி வரும் அசமந்தப் போக்கைக் கண்டித்து புதுக் குடியிருப்பிலும், யாழ்நல்லூரிலும் மாபெரும் கண்டனப் பேரணி இடம் பெற்றது.


புதுக்குடியிருப்பில்

☞ கல்முனையில் இனம் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி பொலிசார் ஒருவர் பலி.

☞ அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் நெதர்லாந்து நாட்டின் வே.கென்னீஜன், சமூக அறிவியல் குழுவின் பேராசிரியர் இர்.ஜோர்ஜ் பிரெக்சை சந்தித்து பொதுக்கட்டமைப்புக் குறித்து வலியுறுத்தினர்.



07

☞ தமிழர் தாயகப் பகுதியில் சிறிலங்கா அரசு மனிதாபிமான அடிப்படையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் புறக்கணித்து வருவது தொடர்பாக அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் நெதர்லாந்து வெளியுறவு அமைச்சகத் துணை நிர்வாக இயங்குநர் ஹெர்மன் ஏ.ஸ்காப்பர் தலைமையிலான குழுவினரைச் சந்தித்தவேளை தெரிவிப்பு.

☞ போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹொக்லண்ட் மட்டக்களப்பில் மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு தலைமையிலான விடுதலைப் புலிகள் குழுவினரைச் சந்தித்தார். இதன் போது கிழக்கில் இடம் பெறுகின்ற படு கொலைகள் நிறுத்தப்பட இராணுவக்கட்டுப் பாட்டுப் பகுதியில் இயங்கிவரும் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படவேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

☞ பொத்துவில் பேருந்து நிலையத்திற்கு முன்பாக சிறிலங்காப் பொலிசார் மேற் கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் 25 இற்கும் அதிகமான அப்பாவி முஸ்லிம் மக்கள் காயமடைந்தனர்.

08

☞ சீனப் பிரதமர் வென்ஜியாபோ சிறிலங்கா விஜயம்.

☞ திருமலையில் பூநகர் விடுதலைப் புலிகளின் சோதனைச்சாவடி மீது சிறிலங்கா இராணுவச் சீருடை அணிந்தோர் தாக்குதல் நடத்தியதில் உதவியாளர் ஒருவர் பலி. துணைப்படைவீரர் காயம்.

☞ வவுனியாவில் பொது மக்கள் மீது கைக்குண்டு வீசிய வரதர் அணி உறுப்பினர் அது வெடித்ததில் காயம்.

☞ காத்தான்குடியில் முன்னாள் ராசிக் குழு உறுப்பினர் சுட்டுக்கொலை.

☞ இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் யாழ்ப்பாணம் விஜயம்.

☞ மறைந்த பாப்பரசருக்கு வத்திக்கானில் ஈழத்தமிழர்கள் சார்பிலும், தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் சார்பிலும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

☞ விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் தென்னாபிரிக்காவிற்கு விஜயம் செய்து அந்நாட்டின் துணை அதிபரின் மூத்த ஆலோசகரைச் சந்திப்பு.



☞ தமிழ்த் தேசியப்பற்றாளர் தில்லைக் கூத்தன் காலமானார்.



☞ எதிர்க்கட்சித் தலைவர் ரணில் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திப்பு.

☞ இலங்கையுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் ஈழத்தமிழர் நலனுக்கு வேட்டுவைத்துவிடுமென இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்த ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ தெரிவிப்பு.

09

☞ திருமலையில் கண்காணிப்புக் குழுவுடன் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் சந்திப்பு. இதன்போது பூநகர் சோதனை அரண் மீதான தாக்குதல் குறித்து தெரிவிப்பு.

☞.திருமலையில் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதியிலுள்ள தங்கபுரம் என்னுமிடத்தில் ஆயுதத்துடன் நுழைந்த இராணுவச் சிப்பாய் கைது.

☞ சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரிட்டன் பயணம்.

10

☞.திருமலையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் விடுதலை.

☞ சாள்ஸ் அன்ரனி சிறப்புத் படையணியின் 14 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற்றது..

இதில் போராளிகளுக்கிடையிலான கபடிப் போட்டி பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மைதானத்தில் இடம் பெற்றது. இதில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.





☞ சிறிலங்காவின் நிதியமைச்சர் சரத் அமுனுகம அமெரிக்கா பயணம்.

☞ தில்லைக்கூத்தனுக்கு நாட்டுப் பற்றாளர் கௌரவம் வழங்கிக் கௌரவிப்பு.

சுனாமியால் அடித்துச் செல்லப்பட்ட 545 வெடிபொருட்கள் இதுவரை மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழிப்பேரலையின்போது சிறிலங்கா இராணுவ முகாம்கள் மற்றும் நிலைகளிலிருந்து மக்கள் நடமாட்டப் பகுதிகளுக்குள் அடித்துச் செல்லப்பட்ட 545 வெடிபொருட்கள் இதுவரை கண்டு பிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் மாவட்ட பணிப் பாளர் கே.தேவராஜன் தகவல் தெரிவிக்கையில்; கல்லடி, மாங்கேணி, பாசிக்குடா, கல்குடா, காயாங்கேணி ஆகிய இராணுவ முகாம்களை அண்டிய பிரதேசங்களிலும் கல்லாறு பொலிஸ் காவல் நிலையத்தை அண்டிய பிரதேசத்திலுமிருந்து இவை கண்டுபிடிக்கப் பட்டதாகத் தெரிவித்தார். இவற்றில் 344 மிதிவெடிகள் என்றும் ஏனையவை கைக்குண்டு, துப்பாக்கி ரவைகள், எறிகணைகள் போன்ற வெடிப்பொருட்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். குறிப்பிட்ட பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் ஏற்கனவே யுத்த காலத்தில் புதைக்கப்பட்ட மிதிவெடிகளை அகற்றும் பணிகளுக்கு புறம்பாக "மக்" நிறுவனத்துடன் இணைந்து இப்பணியை மேற்கொண்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

-புதுவருடத் தினத்தை முன்னிட்டு-

சிறிலங்காவின் சிறைச்சாலைகளில் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

தமிழ் சிங்களப் புத்தாண்டுத் தினத்தில் கைதிகள் தப்பி ஓடக் கூடும் என்ற சந்தேகம் கிளம்பியுள்ளதால் சகல சிறைச்சாலைகளினதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளன.

சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவிக்கும் போது இத்தினத்தில் சிறைச்சாலைக்குள் மதுபானங்கள் வந்து சேர்வதைத் தடுக்கவும் சில ஊழியர்களின் ஆதரவுடன் கைதிகள் தப்பியோடுவதைத் தடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

கைதிகள் தப்பி ஓடுவதற்கு சில அதிகாரிகள் உதவுவதாகத் தெரிவிக்கப்படுவதுடன, சிறைச்சாலை ஆணையாளரின் உத்தரவின் பேரில் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

புகைகக்கும் வாகனங்களுக்கு அடுத்த வருடம் முதல் தடை!

(கொழும்பு)

போக்குவரத்திலீடுபடும் கரும்புகைகக்கும் வாகனங்களைத் தடை செய்வது குறித்து பரிசீலித்து வருவதாக சிறிலங்காவின் சுற்றாடல் இயற்கை வள அமைச்சர் ஏ.எச்.எம் பௌசி தெரிவித்துள்ளார்.

அடுத்த வருட ஆரம்பம் முதல் மேற்படி வாகனங்களுக்கான தடை அமுலுக்கு வருமென்றும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்; நாட்டில் 18 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் இலங்கை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு பதிவு செய்யப்பட்டவற்றில் 75 சதவீதத்திற்கும் அதிகமான வாகனங்கள் கரும்புகை கக்கும் வாகனங்களாகும். இதனால் சூழல் மாசுபடுத்தப்படுவதுடன், மக்களுக்கு நோய்கள் ஏற்படும் அபாயமுள்ளது. வாகனங்களிலிருந்து வெளியேறும் கரும் புகையினால் புற்றுநோய் ஏற்படும் அபாயமுள்ளது.

எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு கரும்புகைகக்கும் வாகனங்களை அடுத்த வருடம் முதல் தடை செய்ய உத்தேசித்துள்ளதாகவும் இது தொடர்பான கண்காணிப்புக்களை மேற்கொள்ள இரு நிறுவனங்கள் நிறுவப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் ஜே.வி.பி- சு.க மோதல்!

(கொழும்பு)

ஜே.வி.பியினரின் மாகாண சபை உறுப்பினர் உட்பட்ட குழுவினருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவு பிரதேசசபை உறுப்பினர் உட்பட்ட குழுவினருக்கும் இடையில் மோதல் ஒன்று நடைபெற்றுள்ளது.

கடந்த 10ஆம் திகதி நடைபெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது; அக்குரஸ்ஸ தேர்தல் தொகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற தேர்தலின் போது அங்கு ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி கைகலப்பில் முடிவடைந்ததாகவும், சம்பவத்தில் மூவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் குறிப்பிட்ட தேர்தலும் நடைபெறவில்லை. இது தொடர்பாக இரு பிரிவினரும் பொலிசில் முறையீடு செய்துள்ளனர்.

200 கர்ப்பிணிகள் 4420 சிசுக்கள் ஒரு வருடத்தில் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் வருடம் ஒன்றுக்கு 200 கர்ப்பிணித் தாய்மார்களும், 4420 சிசுக்களும் மரணிக்கிறார்களென சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிகால் ஜயதிலக்க கூறியுள்ளார்.

இதில் 3094 சிசுக்கள் ஒருமாதத்திற்கு குறைந்தவர்கள் என மருத்துவர்கள் அறிவித்துள்ளனர். ஒரு வருடத்தில் மூன்று லட்சத்து 50 ஆயிரத்து அறுநூறு காப்பிணித் தாய்மார்கள் குழந்தைகளை பிரசவிக்கின்றனர் என வருடாந்த சுகாதார அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

35இற்கும் மேற்பட்ட அமைச்சர்கள் பா.உ.கள் வெளிநாடு பயணம்

(கொழும்பு)

35இற்கும் மேற்பட்ட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்துள்ளனர். சித்திரைப் புதுவருட விடுமுறையினைக் கழிப்பதற்காகவும், சுனாமி அனர்த்த எச்சரிக்கைகான வழிமுறைகள் குறித்து ஆராய்வதற்காகவுமே இவர்கள் வெளிநாடுகளுக்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ளனர்.

சுனாமி அனர்த்த எச்சரிக்கை குறித்து ஆராய்வதற்கா 24 பாராளுமன்ற உறுப்பினர்கள் அவுஸ்திரேலியா, ஜேர்மனி, துருக்கி, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளனர். கடந்த எட்டாம் திகதி இந்த நாடுகளுக்கு விஜயம் செய்துள்ள இந்த பா.உ.கள் எதிர்வரும் 20 ஆம் திகதியே நாடு திரும்பவுள்ளனர். இக்குழுவில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை அமைச்சர்கள் பலரும் விடுமுறையைக் கழிப்பதற்காக ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தனும் தென் கொரியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் லண்டனுக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அமைச்சர் சரத் அமுனுகமவும் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற் கொண்டுள்ளார்.

பிரதமர் பங்கேற்ற கூட்டமருகே துப்பாக்கி,ரவைகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மகியங்கனையில் ஞாயிற்றுக்கிழமை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு அருகே வாகனம் ஒன்றில் துப்பாக்கி ஒன்றும் சில ரவைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வாகனத்தில் இருந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மகியங்கனை தேசிய பாடசாலை மைதானத்தில் பிரதமரின் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. பிரதமர் மேடையில் உரையாற்றிக் கொண்டிருக்கையில அவ்விடத்திற்கு சமீபமாக சந்தேகத்திற்கிடமாக நிறுத்தப்பட்டிருந்த வாகனம் குறித்து சந்தேகித்த பொலிசார் வாகனத்தை சோதனையிட முயன்றபோதிலும் வாகனத்தில் இருந்தவர் அதற்கு அனுமதிக்கவில்லை எனக் கூறப்படுகிறது. எனினும் பின்னர் பிரதமரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் இணைந்து மேற்கொண்ட சோதனையில் வாகனத்தினுள் இருந்து துப்பாக்கியொன்றும் நான்கு தோட்டாக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயற்திறன் விருத்திப் பரீட்சை

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயற்திறன் விருத்திப் பரீட்சை கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மூன்று வலயப் பிரிவுகளில், 16 நிலையங்களில் நடைபெற்றது.

கல்குடா, பட்டிருப்பு, மட்டக்களப்பு வலயங்களைச் சேர்ந்த 494 முன்பள்ளிகளில் கற்பிக்கும் 960 ஆசிரியர்களிற்கே இப்பரீட்சை நடாத்தப்பட்டது.

மட்டக்களப்புத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட இப்பரீட்சையின் பெறுபேறுகள் விரைவில் வெளியிடப்படவிருக்கின்றன.

மரணமானவரிடமிருந்து பெறப்பட்ட சிறுநீரகங்கள் நோயாளிக்கு வெற்றிகரமாகப் பொருத்தல்

-கண்டி வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை

மரணமான ஒருவரிடமிருந்து பெறப்பட்ட சிறுநீரகங்கள் நோயாளி ஒருவருக்கு வெற்றிகரமாக பொருத்தப்பட்டுள்ளது.

இதற்கான சத்திர சிகிச்சை கண்டி வைத்தியசாலையில் இடம் பெற்றுள்ளது.

விசேட வைத்திய நிபுணரான ஹரிஸ்சந்திர தம்மிக்க தலைமையிலான குழுவினால் இந்தச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. கடந்த 4 மாதங்களுக்கு முன்னரும் இவ்வாறான சத்திர சிகிச்சை ஒன்றின் மூலம் நோயாளிக்கு சிறுநீரகங்கள் பொருத்தப்பட்டன.

அன்னை பூபதி நினைவாக பூந்தோட்டத்தில் சிரமதானம்

(வவுனியா செய்தியாளர்)

அன்னை பூபதி நினைவாக வவுனியா பூந்தோட்டம் பிரசேத்தில் சிரமதானம் இடம்பெற்றுள்ளது.

மாகாறம்பைக்குளம் தேசிய எழுச்சிப் பேரவையினரின் ஏற்பாட்டில் மகாறம்பைக்கும் பிள்ளையார் கோயிலிலும், மதீனாநகர் முஸ்லிம் பள்ளிவாசலிலும், பெரியார்குளம் தேசிய எழுச்சிப் பேரவையினரின் ஏற்பாட்டில் பெரியார்குளம் சனசமூக நிலையத்திலும் சிரமதானம் இடம்பெற்றது. இச்சிரமதான நிகழ்வுகளில் தமிழ்,முஸ்லிம் மக்கள் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

காந்தரூபன் அறிவுச்சோலை மாணவர்களின் சிறந்த பெறுபேறு

காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லத்தின் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் பலர் சிறந்த பெறு பேற்றை பெற்றுள்ளார்கள். அவர்களது விபரம் வருமாறு:-

அ.வதனரூபன் - 4ஏ, 4பி, 2சி
சி.வினோத் - 3ஏ, 2பி, 4சி, எஸ்
மு.பாலன் -ஏ, பி, 3சி, 5எஸ்
சு.விஜிதரன் - ஏ, 3சி, 4எஸ்
சி.தேவதாஸ் - ஏ, 4சி, 3எஸ்
தி.துசிகரன் - 2பி, 4எஸ்
இ.ரமேஸ்குமார் - ஏ, 3பி, 4சி
பே.சதீஸ் - ஏ, 3சி, 2எஸ்

மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய 11 மாணவர்களில் எட்டு மாணவர்கள் க.பொ.த உயர்தரத்தில் கற்பதற்கு தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

4995 பேர் சிகிச்சை

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் கடந்த மார்ச் மாதம் 4995 நோயாளர் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலையின் கடந்த மாத நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் விபரமாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, வெளி நோயாளர் பிரிவில் 3684 பேரும், சாதாரண காய்ச்சலினால் 820 பேரும், குருதிச் சோகையினால் 194 பேரும், சிரங்கினால் 156 பேரும், வயிற்றோட்டத்தினால் 79 பேரும், விச்நாய்கடியினால் 21 பேரும், மலேரியாக் காய்ச்சலினால் 10 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர், மேற்படி வைத்திய சாலையின் மத்திய மகப்பேற்று மனையில் கடந்த மாதம் 54 கர்ப்பிணித் தாய்மார்கள் மகப்பேற்றுக்காக அனுமதிக்கப்பட்டு அதில் 27 சிசுப் பிறப்புக்கள் நிகழ்ந்துள்ளன. (ஆ)

மாட்டு வண்டிச் சவாரி பிற்போடல்

புதுவருடத்தன்று வற்றாப்பளை மங்களேஸ்வரா விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படவிருந்த மாட்டு வண்டிச்சவாரி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.ஏனைய போட்டிகள் புதுவருடத்தன்று நடைபெறுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஆ)

டென்மார்க்கின் "கோவி" நிறுவனத்தால் வடக்கில் குடிநீர் வழங்கல் திட்டம்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளில் டென்மார்க் அரசின் உதவியுடன் இயங்கும் கோவி என்ற நிறுவனம் பாரிய குடிநீர் வழங்கல் திட்டங்களை அமுல் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இந்த நிறுவனம் களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் நீர்வழங்கல் திட்டங்களை அமுல்செய்து வருகிறது. அண்மையில் கொழும்பில் நடைபெற்ற அமர்வு ஒன்றில் இதற்கான வேண்டுகோளை கெரிட்டாஸ் இலங்கை செடெக் நிறுவன மக்கள் தொடர்பாடல் அதிகாரி எஸ்.பி அந்தோனிமுத்து முன்வைத்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட கோவி நிறுவன நீர்வழங்கல் பகுதி திட்ட முகாமையாளர் வகன் ரெகோஜ் உரியவர்கள் கோரிக்கை விடுத்தால் அதனை அமுல்படுத்த தமது நிறுவனத்தால் முடியும் எனக் குறிப்பிட்டார்.

சுனாமியால் பாதிப்புற்றோருக்கு வீடுகள் அமைக்கும் திட்டம் ஆரம்பம்

சுனாமிப் பேரலைத் தாக்கத்தினால் முற்றாகவே வீடுகளை இழந்த கல்லாறு மூன்றாம் குறிச்சியைச் சேர்ந்த 200 குடும்பங்களிற்கு மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் வீடுகள் கட்டி வழங்கும் பணியை நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளனர்.

இன்னும் ஒருமாதகாலத்திற்குள் குறித்த 200 பேருக்குமான வீடுகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்படவிருக்கின்றன.

அடிக்கல் நாட்டல்

(மன்னார்)

மன்னார் பிரதி சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தின் பணிமனை கட்டடத்திற்கான அடிக்கல்நாட்டு விழா நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் மன்னார் பொது வைத்தியசாலை வளாகத்தில் இடம் பெற்றது. மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விஸ்வலிங்கமும், பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளரும், நிகொட் நிறுவனப்பணிப்பாளரும் அடிக்கல்லை நாட்டி வைத்தனர். இந்தக்கட்ட நிர்மாணத்திற்காக இருபது மில்லியன் ரூபாவினை நிகொட் நிறுவனம் வழங்கியுள்ளது. (18)

துப்பாக்கி வைத்திருந்த நால்வர் கைது

(மாத்தளை)


மாத்தளைப் பகுதியில் துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த சந்தேகத்தின் நான்கு பேர் மாத்தளைப் பொலிசாரால் கடந்த ஞாயிறு இரவு கைது செய்யப்பட்டனர். இவர்களிமிருந்து ரி 56 ரக துப்பாக்கியுடன் ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்திய, சீனப் பிரதமர்களிடையே 12 முக்கிய விடயங்களில் உடன்பாடு

-ஐ.நா பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமைக்கு சீனா ஆதரவு

(புதுடில்லி)

இந்தியாவில் நான்கு நாள் பயணமாக இந்தியா வந்துள்ள சீனப் பிரதமர் வென்ஜியாபோ, பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்தார். நேற்று முன்தினம் டில்லி சென்ற சீனப் பிரதமருக்கு சனாதிபதி மாளிகையில் விமர்சையாக வரவேற்பு கொடுக்கப்பட்டது. பிரதமர் மன்மோகன், சீனப் பிரதமரை வரவேற்று தமது அமைச்சர்களை சீனப் பிரதமருக்கு அறி முகப்படுத்தி வைத்தார்.



பின்னர் சீனப் பிரதமருக்கான் இராணுவ அணி வகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்ட பிரமதர் நிருபர்களிடம் பேசியபோது,

இந்தியாவும், சீனாவும் நட்புப் பாலத்தை அமைக்கும், இரு நாட்டு உறவை வளர்க்கும் வகையில் பொருளாதாரம் மற்றும் வர்த்தகத்தை ஊக்குவிக்கும் வகையில் விரிவான திட்டம் தீட்டப்படும். நீண்ட காலமாக இருந்துவரும் இந்திய- சீன எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் வழிகாட்டும் நெறிமுறைகள் வகுக்கப்படும். வளமான எதிர்காலத்துக்கு இட்டுச் செல்லும் வகையில் நட்புப் பாலம் அமைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் மன்மோகன்சிங்கும், சீனப் பிரதமர் வென் ஜியாபோவும் நீண்ட நேரம் பேசினர். இதன் போது இரு நாட்டு உறவு, சர்வதேச பிரச்சினை ஆகியவை பற்றி விபரமாகப் பேசினர். அவர்களுக்கு உதவியாக இரு நாட்டு அமைச்சர்களும், அதிகாரிகளும் இருந்தனர். அப்போது ஐ.நா பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர உறுப்புரிமை பெற்றால் மகிழ்ச்சி அடைவோம் என்று சீனப் பிரதமர் கூறினார். பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 12 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. அதில் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே நாராயணன் சீன வெளியுறவு அமைச்சர் தாய் பின்குவோ ஆகியோர் கையெழுத்திட்டனர். ஒப்பந்தங்களில் முக்கிய அம்சங்களாக இரு நாட்டு வர்த்தகத்தை வரும் 2008ஆம் ஆண்டளவில் ரூ.90 ஆயிரம் கோடியாக (2000கோடி டொலர்) உயர்த்துவதற்கு முயற்சி மேற்கொள்வது. எல்லைப் பிரச்சினை இரு நாட்டு உறவு வலுப் பெறுவதற்குத் தடையாக இருக்கக் கூடாது. "பஞ்சசீல" கொள்கை அடிப்படையில் எல்லை தகராறைத் தீர்க்க வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் படைப்பலத்தைப் பயன்படுத்தக்கூடாது. இராணுவங்கள் மோதுதல் கூடாது. சீக்கிம் மாநிலம் இந்தியாவின் ஒரு பகுதி என்பதை சீனா ஏற்கிறது. சீன வரை படத்தில் சிக்கிம் இடம்பெறாது. இரு நாடுகளுக்கும் இடையே விமான சேவைகளை அதிகரிப்பது முக்கிய கால கட்டத்தில் வாரத்திற்கு 42 விமான சேவைகளை நடத்துவது ஆகியவை உட்பட 12 உடன்பாடுகள் கையெழுத்தாகின.



ஜெயலலிதா அரசின் கடும் போக்கைக் கண்டித்து நேற்று முன்தினம் திருச்சியில் அரச ஊழியர்கள் 15 அம்சக் கோரிக்கைகளை வலி யுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒரிசாவில் விநோத திருமணம்

ஒரிசா மாநிலத்தில் ஐந்து வயதுப் பெண்குழந்தையை நாய்க்குத் திருமணம் செய்து வைத்த சம்பவம் கடந்த ஆறாம் திகதி நடந்துள்ளது. ஒரிசாவில் வாழும் பழங்குடியினரிடமுள்ள ஒரு சம்பிரதாயம் இது.

ஒரிசாவின் வடக்குப் பகுதியிலும், ஜார்க்கண்ட் மாநிலத்தின் தெற்குப் பகுதியிலும், முண்டா என்ற பழங்குடி இன மக்கள் வசிக்கின்றனர். இந்த மக்களிடம் தான் நாய்க்கு குழந்தையைத் திருமணம் செய்து வைக்கும் ஒரு விநோத பழக்கம் உள்ளது. இவர்கள் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் வசிக்கிறார்கள். வேட்டையாடுவது முக்கிய தொழில் இவர்கள் வேட்டைக்குச் செல்லும் போது குழந்தைகளைத் தனியாக விட்டுச் செல்வர்கள். தனியாகவிருக்கும் பெண் குழந்தைகளுக்கு வன விலங்குகளால் பிரச்சினை வராமல் இருப்பதற்காக நாய்க்குத் திருமணம் செய்து வைக்கும் சம்பிரதாயத்தை செய்கின்றனர். கடந்த ஆறாம் திகதியன்று ஐந்து வயதுப் பெண் குழந்தைக்கு ஒருநாயைத் திருமணம் செய்து வைத்தனர். புவனேஸ்வரியில் இருந்து சில பத்திரிகையாளர்களை அழைத்து வந்து அவர்கள் முன்பாக இந்தத் திருமணத்தை நடத்தினர்.

இவர்களில் 250 பேர் இரு குழுக்களாகப் பிரிந்து பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி நிருபர்கள் முன்னிலையில் இந்தத் திருமணத்தை நடத்தினர்.

அப்பாவிகளை விடுத்து கடசித்தலைவர்களைச் சுடுங்கள் நக்சலைட் தலைவர் உறுப்பினர்களுக்கு கட்டளை!

ஆந்திராவில் மாவோயிஸ்டு என் னும் நக்சலைட் தீவிரவாதிகள் ஆயுதம் ஏந்திப் புரட்சி செய்து வருகி றார்கள். கடந்த சில மாதங்களாக அவர்கள் கிராமங்களில் புகுந்து பணம் தர மறுத்த மக்களை சுட்டுக் கொன்ற வண்ணமுள்ளனர். இது ஆந்திர மக்களிடையே கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது,

இந்த நிலையில் நேற்று நக் சலைட் இயக்க மாநிலத் தலைவர் ராமகிருஷ்ணா நிருபர்களிடம் கூறும் போது,

இனிமேல் நக்சலைட்டுகள் அப்பாவிக் கிராமமக்களையும் பொலி சாரையும் கொலை செய்யக் கூடாது. இதனால் மக்களிடம் நமக்கு அவப் பெயர்தான் ஏற்படும்.

காங்கிரஸ் தெலுங்கு தேசம் மீதுள்ள கோபத்தில் அதன் தொண்டர் களை கொலை செய்வதில் எந்த வித பிரயோசனமும் இல்லை. அத னால் இனி கட்சியில் முக்கிய பதவி களிலுள்ள தலைவர்களையும், ஊழல் செய்து கோடிக்கணக்கில் சொத்துச் சேர்த்துள்ள தலை வர்களையும் தான் சுட்டுக் கொல்ல வேண்டும். அப்போது தான் நக் சலைட்டுக்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். தவறு செய்யும் அரசியல் வாதிகளை தண்டிப்பது நமது இலட்சியம். அந்த இலட்சி யத்தில் இருந்து ஒரு போதும் பின் வாங்கக் கூடாது. இவ்வாறு அவர் கூறினார்.

நக்சலைட்டு தலைவரின் இந்த அறிவிப்பால் அரசியல் தலைவர்கள் பீதியடைந்துள்ளனர். எங்கு போனா லும் பொலிஸ் பாதுகாப்புடன் தான் செல்கிறார்கள்.

ஐ.நா அமைதிப் படையில் இந்திய இராணுவம் முக்கிய இடம்

(புதுடில்லி)

ஐக்கிய நாடுகள் அமைதிப்படைக்கு அதிகளவான இராணுவ வீரர்களை அனுப்பியுள்ள நாடுகள் வரிசையில் இந்தியா விரைவில் முக்கிய இடம் பெறவுள்ளது.

சூடானில் ஐ.நா அமைதிப்படையினர் பாதுகாப்புப் பணியை மேற் கொண்டுள்ளனர். இப் பணிக்கு இந்திய வீரர்களையும் அனுப்ப வேண்டும் என ஐ.நா. பொதுச் செயலர் வேண்டுகோள் விடுத்தார். இதையடுத்து இரண்டு இராணுவக் குழுவினர் அடுத்த மாதம் சூடான் செல்கின்றனர். இதன் மூலம் ஐ.நா அமைதிப் படையில் பணியாற்றும் இந்திய வீரர்களின் எண்ணிக்கை ஏழாயிரத்தைத் தாண்டும் லெபனான், கொங்கோ உள்ளிட்ட நாடுகளில் பாதுகாப்புப் பணியில் ஐ.நா அமைதிப்படை ஈடுபட்டுள்ளது. இதிலும், இந்திய வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். சூடானிற்கு இந்தியப் படைகள் சென்றால் அமைதிப்படையில் இந்திய இராணுவ வீரர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். மற்ற நாடுகளை விட அமைதிப் படையில் இந்திய வீரர்களே அதிக அளவில் இடம்பெற்றிருப்பர். இத் தகவலை இராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜெயலலிதா அரசின் கடும் போக்கைக் கண்டித்து அரச ஊழியர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

(சென்னை)

ஜெயலலிதா அரசின் போக்கை கண்டித்து, தமிழ்நாட்டின் அரச ஊழியர் சங்கம் 15 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்புப் பேரணி ஒன்றை நடத்தினர்.

பேரணிக்கு வடசென்னை மாவட் டத் தலைவர் எஸ்ஏ வெற்றிராஜன் தலைமை தாங்கினார். அரச போக்கு வரத்து ஊழியர் சங்க பொதுச் செய லாளர் ஏ.பி அன்பழகன் தொடக்கி வைத்தார். இந்தப் பேரணி சென்னை அண்ணாசாலையில் உள்ள பெரியார் சிலையில் இருந்து புறப்பட்டு சேப் பாக்கம் விருந்தினர் மாளிகையை வந்தடைந்தது. பேரணி முடிவில் ஊழியர்கள் கோஷம் எழுப்பினர். மாநில பொருளாளர் வி.தேவன் செய லாளர் என்.இளங்கோ ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

அரச ஊழியர்களின் முக்கிய கோரிக்கைகளாக;

*. எஸ்மா, டெஸ்மா சட்டங் களை ரத்து செய்து ஆணை வழங்க வேண்டும்.

*. பணி நியமன தடைச் சட்டங் களை இரத்துச் செய்ய வேண்டும். ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். கருணை அடிப்படையில் மீண்டும் பணி நியமனங்களை வழங்க வேண்டும். கதர்கிராம தொழில் திணைக்களத்தில் பணி நீக்கம் செய்யப் பட்டவர்களுக்கு மீண்டும் பணி வழங்க வேண்டும். ஆகிய விடயங்கள் உட்பட 15 கோரிக் கைகள் இதில் அடங்குகின்றன. மதுரையில் நேற்று மாலை இடம்பெற்ற பேரணி யில் 200 பெண் ஊழியர் உட்பட 1100 பேர் எழுச்சியுடன் பங்கேற்றனர். இந்தப் பேரணிக்கு சங்க மாவட்டத் தலைவர் சுப. மாரி தலைமை தாங்கினார். அரச ஊழியர் சங்கத்தின் விருதுநகர் மாவட்டத் தலைவர் எம். சுப்பிரமணி தலைமையில் விருதுநகர் எம்.ஜி.ஆர் சிலையில் இருந்து நேற்று மாலை பேரணி தொடங்கியது. பேரணியில் பறிக்கப்பட்ட சலுகைகளை திரும்ப வழங்கக் கோரி கோஷங்கள் எழுப்பப்பட்டது. இந்தப் பேரணியில் 100 பெண்கள் உட்பட 400 பேர் கலந்து கொண்டனர்.

சிவகங்கையில் மாவட்டக் கிளை சார்பில் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. மாவட்டத் தலைவர் சுப்பிரமணியன் தலைமை தாங்கி னார். மாநிலத் துணைத் தலைவர் தமிழ்ச்செல்வி சிறப்புரையாற்றினார். பேரணியில் 30 பெண்கள் உட்பட 300 பேர் கலந்து கொண்டனர். ராமநாதபுரம் மாவட்டத் தலைவர் உமர்காசிம் தலைமையில் பேரணி நடை பெற்றது. பேரணியில் சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச் சர்களுக்கு மட்டும் சம்பள உயர்வு எங்கள் கோரிக்கை மட்டும் நிராக ரிப்பா? அரசே தமிழக அரசே டெஸ்மா சட்டத்தை மீளப் பெறு என்று கோஷம் எழுப்பினர்.

தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் லட்சக்கணக் கான அரச ஊழியர்கள் கலந்து கொண்டு ஜெயலலிதா அரசுக்கு எதிராகக் கோஷம் எழுப்பினர்.

மனைவியை இறக்க விடுவதற்கு ஆளுநரிடம் கணவன் வேண்டுகோள்!

ஐந்து ஆண்டுகளாக கோமா நிலையில் இருக்கும் தனது மனைவியை இறக்க விடுவதற்கு (கருணைக் கொலை) அனுமதி அளிக்க வேண்டுமென்று பீகார் ஆளுநர் பூட்டா சிங்கிடம் கணவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது மனைவியான காஞ்சன் தேவி கடந்த ஐந்து ஆண்டுகளாக கோமா நிலையில் இருக்கிறார். அவருக் குத் தொடர்ந்து சிகிச்சை அளித்து வந்த போதும் எந்தப்பலனும் கிடைக் கவில்லை. இதில் இருந்து தனது மனைவியைக் காப்பாற்றவே முடி யாது என்று வைத்தியர்கள் கைவிட்டு விட்டனர். வெறும் சுவாசம் மட்டுமே தனது மனைவிக்கு உள்ளதாகவும், தன் கண்களை இது வரை திறக்க வில்லை. எந்த அசைவும் இல்லை. மனைவிக்குச் சிகிச்சை அளிக்க வீட்டில் இருந்த நகைகள் உட்பட அனைத்துப் பொருட்களையும் விற்றுத் தனது வருமானத்தையும் மீறி சிகிச்சை அளித்து விட்ட போதி லும் தொடர்ந்து இனியும் தன்னால் சிகிச்சை அளிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே தனது மனைவி நல்ல முறையில் வலியில்லாமல் இறப் பதற்கு அனுமதி அளிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார். ஆண்டுக்கணக்கில் அவர் சித்திர வதை அனுபவிப்பதை விட நிம்மதி யாக அவர் இறப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

நான்காவது ஒருநாள் போட்டி

வெற்றிக்காக இரு அணிகளும் போராட்டம்

பாகிஸ்தானுக்கு மூன்று விக்கெட் வெற்றி



இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் அகமதாபாத்தில் நேற்று நடைபெற்ற நான்காவது போட்டியில் பாகிஸ்தான் அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.


ஆட்டத்தின் இறுதிப் பந்துவரை வெற்றி யாருக்கு என்ற நிலையில் மிகவும் பரபரப்பாக நடந்த இப்போட்டியில் அணித் தலைவர் இன்சமாம் கடைசிப் பந்தில் வெற்றிஓட்டத்தைப் பெற்றார்.

இதன் மூலம் ஆறு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் நான்கு போட்டி நிறைவடைந்த நிலையில் 2-2 என்ற விகிதத்தில் சமன் செய்தது பாகிஸ்தான். முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் கங்குலி தமது அணி முன்னதாகத் துடுப்பெடுத்தாடும் என்று அறிவித்தார்.

இதன்படி சச்சினும், சேவாக்கும் அதிரடியாக ஆட்டத்தை ஆரம்பித்தனர். அணி 65 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது சேவாக் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.


மறுமுனையில் நட்சத்திரத் துடுப்பாட்டவீரர் சச்சின் சிறப்பாக ஆடிச் சதமடித்தார். அவர் 130 பந்தினை எதிர்கொண்டு 12 நான்கு ஓட்டம் இரண்டு ஆறு ஓட்டம் அடங்கலாக 123 ஓட்டங்களைப் பெற்றார்.

இவரை விட டோனி 47, யுவராஜ்சிங் 35 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஆறுவிக் கெட்டை இழந்து 315 ஓட்டங்களைப் பெற்றது இந்தியா பந்துவீச்சில் சொகைப்மலிக்



மூன்று விக்கெட்டுக்களையும், சமிஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

316 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அப்ரிடியைத்தவிர ஏனைய வீரர்கள் நிதானமாகவும், பொறுப்புடனும் ஆடி இறுதிப்பந்தில் வெற்றி இலக்கை அடைந்தனர்.



துடுப்பாட்டத்தில் சல்மான்பட் 48, அப்ரிடி40, ரசாக் 44, மலிக் 65, இன்சமாம் ஆட்டமிழக்காது 60 ஓட்டங்களையும் முறையேஅதிகபட்சமாக பெற்றனர். அப்ரிடி 40 ஓட்டங்களை 23பந்துகளை எதிர்கொண்டு பெற்றார். முரளிகார்த்திக் இரண்டு விக்கெட்டுக் களையும், பாலாஜி, சஹீர்ஹான், டெண்டுல்கர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.போட்டியின் நாயகனாக பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல்-ஹக் தெரிவானார்.

காலநிலை சீரின்மையால் போட்டி 48 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி 13 மாதங்களின்பின் சச்சின் சதம்

பாகிஸ்தானுக்கு எதிராக அகமதாபாத்தில் நேற்று நடந்த நான்காவது ஒருநாள் போட்டியில் டெண்டுல்கர் அபாரமாக விளையாடி 'சதம்' அடித்தார். கடந்த சில மாதங்களாக அவரது துடுப்பாட்டம் மோசமாக இருந்தது. இதனால் அனைவராலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டார். அவருக்கு ஓய்வு கொடுப்பது நல்லது என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. இந்த விமர்சனங்களுக்கு அவர் நேற்று முற்றுப்புள்ளி வைத்தார். ஆரம்ப காலத்தில் எப்படி அதிரடியாக விளையாடுவாரோ அது போல் அவரது ஆட்டம் நேற்று அபாரமாக இருந்தது. அதற்கு அவர் அடித்தஇரண்டு ஆறு ஓட்டம் உதாரணம்.

டெண்டுல்கர் 13 மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் போட்டியில் 'சதம்' அடித்துள்ளார். கடைசியாக 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி ராவல்பிண்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக நடந்த இரண்டாவது ஒருநாள் போட்டியில் 141 ஓட்டம் எடுத்தார்.

அதன்பின்னர் 15 போட்டிகளில் விளையாடி விட்டார். இதில் ஆசியக்கோப்பையில் அதிகபட்சமாக 82 ஓட்டம் எடுத்தார். பாகிஸ்தானுக்கு எதிரான முதல் மூன்று போட்டியிலும் சேர்த்து 12 ஓட்டங்களே எடுத்திருந்தார். நேற்றைய ஆட்டம் அவருக்கு அதிர்ஷ்டகரமாக அமைந்தது.

346 ஆவது ஒரு நாள் போட்டியில் விளையாடும் டெண்டுல்கருக்கு இது 38 ஆவது 'சதம்' ஆகும்.

டெண்டுல்கருக்கு அடுத்தபடியாக கங்குலி 22 சதமும், சயீத் அன்வர் (பாகிஸ்தான்) 20 சதமும், லாரா (மேற்கிந்தியத்தீவு) 19 சதமும் அடித்துள்ளனர்.

இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நியூசிலாந்து வலுவான நிலையில்



நியூசிலாந்து சிறிலங்கா அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி வலுவான நிலையிலுள்ளது.

சிறிலங்கா அணி பெற்ற 211 ஓட்டங்களுக்குப் பதிலளித்து தனது முதலாவது இன்னிங்சை ஆடும் நியூசிலாந்து இரண்டாம் நாள் ஆட்ட நேரமுடிவின் போது நான்கு விக்கெட்டுக்களை இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் வின்சென்ட் 79 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் பிளெமிங் 60 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர். கம்மிங் 47 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும். மேற்படி போட்டி நியூசிலாந்தின் வெலிங்டனில் நடைபெற்று வருகின்றது.



இரண்டாவது டெஸ்ட் போட்டி; மேற்கிந்தியத்தீவு அணி திணறல்




மேற்கிந்தியத்தீவு தென்னாபிரிக்க அணிகள் இடையேயான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி போர்ட் ஆப் ஸ்பெயினில் நடைபெற்றுவருகிறது. மேற்கிந்தியத்தீவு முதல் இன்னிங்சில் 347 ஓட்டம் எடுத்தது. பின்னர் முதல் இன்னிங்சை விளையாடிய தென்னாபிரிக்கா மூன்றாவது நாள் ஆட்ட நேர முடிவில் ஆறு விக்கெட் இழப்புக்கு 370 ஓட்டம் எடுத் திருந்தது.

நேற்று முன்தினம் நான்காவது நாள் ஆட்டம் நடந்தது. தொடர்ந்து ஆடிய தென்னாபிரிக்கா 398 ஓட்டம் குவித்து அனைத்து விக்கெட்டையுமிழந்தது. அணித் தலைவர் சிமித் 148, மார்க் பவுச்சர் 45, கலிஸ் 39 ஓட்டங்களை முறையே எடுத்தனர்.

மேற்கிந்தியத்தீவு தரப்பில் கிறிஸ்கெய்ல் நான்கு விக்கெட்டும், பெட்ரோகொலின்ஸ் பிரேவோ தலாஇரண்டுவிக்கெட்டும் எடுத்தனர். 51ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் மேற்கிந்தியத்தீவு இரண்டாவது இன்னிங்சை ஆடியது. தென்னாபிரிக்க வீரர்கள் அபாரமான பந்து வீச்சால் அந்த அணி திணறியது. 92 ஓட்டத்தில் இரண்டு விக்கெட்டை இழந்தது சர்வான் மிகவும் சிறப்பாக விளையாடி விக்கெட் சரிவைத் தடுத்தார்.

நேற்று முன்தின ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத்தீவு ஐந்து விக்கெட் இழப்புக்கு 170 ஓட்டம் எடுத்திருந்தது. சர்வான் 93 பிரேவோ 30 ஓட்டங்களைப்பெற்று ஆட்டம் இழக்காமல் இருந்தனர். நிதினி முன்று விக்கெட்டும், போஜே இரண்டு விக்கெட்டும் எடுத்தனர். இரு அணிகள் இடையே கயானாவில் நடந்த முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

2007 உலகக்கிண்ண கிரிக்கெட்டின் பின் அடம்கில்கிறிஸ்ட் ஓய்வுபெற விருப்பம்



அவுஸ்திரேலியா அணியின் சிறந்த விக்கெட் காப்பாளரும், துடுப்பாட்ட வீரருமான அடம்கில்கிறிஸ்ட் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள 2007ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்னர் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.தனது பிள்ளைகள் வளர்ந்து வரும் நிலையில் சமூகத்தில்தான் என்ன நிலையில் இருக்கிறார் என்ன செய்கிறார் என்று உணரக்கூடும் என்றும் அதனால் அவர்களின் முன்னேற்றத்துக்கு பங்களிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கில் கிறிஸ்ட் ஏற்கெனவே இரு உலகக்கிண்ண பதக்கங்களைப் பெற்றுள்ளார். ஒருநாள் போட்டியில் ஏழாயிரம் ஓட்டங்களையும் 300 பிடிகளையும் எடுத்துள்ளார். அவரது அடுத்த கனவு எதிர்வரும் ஆஷஸ் தொடரில் கிண்ணத்தைத்தக்க வைப்பதாகும்.

டேவன் போர்ட் சம்பியன்

அமெரிக்காவிலுள்ள அமெலி தீவில் நடைபெற்ற டென்னிஸ் போட்டியில் பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் முதல் நிலை வீராங்கனை லிண்ட்சே டேவன்போர்ட் (அமெரிக்கா), இத்தாலி வீராங்கனை சில்வியா டரினா எலியாவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார்.

இவர் 7-5,7-5 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று மூன்றாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார். இதற்கு முன்பு நவரத்திலோவா,கிறிஸ் இவெர்ட்,ஸ்டெபி கிராப்,சபாடினி ஆகியோர் இந்தப் பட்டத்தை மூன்று தடவை வென்றுள்ளனர். அந்தப் பட்டியலில் டேவன் போர்ட்டும் சேர்ந்துள்ளார்.



விளையாட்டு

கிளி. கிளையோர் செயற்பாட்டு நிறுவனம் சமகளமிக்கக் கோரிக்கை

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் ஆதரவில் தமிழீழ விளையாட்டுத்துறையினால் பூப்பந்தாட்டப்போட்டி நடாத்தப்படவுள்ளது.


மேற்படி போட்டிக்கு விண்ணப்பித்த அனைவரும் இன்று பிற்பகல் 5.00 மணிக்கு கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவனத்திற்கு தவறாது சமுகமளிக்கும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளதுடன், அனைவருக்குமான தெரிவுப்போட்டிகள் நாளை நடைபெற்று போட்டி நிரல்கள் கையளிக்கப்படவுள்ளதென தமிழீழவிளையாட்டுத்துறையினர் தெரிவித்துள்ளனர். (சோ)


ஒருநாள் போட்டிகளில் விளையாட அணித்தலைவர் கங்குலிக்குத் தடை



இந்திய கிரிக்கட் அணியின் தலைவர் கங்குலிக்கு அடுத்துவரும் ஆறுபோட்டிகளில் விளையாடுவதற்குத்தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிற்கும், பாகிஸ்தானிற்கும் இடையில் அகமதாபாத்தில் நேற்று நடைபெற்ற நான்காவது ஒருநாள் சர்வதேசப் போட்டியின்போது நிர்ணயிக்கப்பட்ட பந்துப் பரிமாற்றங்களை விடக் குறைவான பந்துப் பரிமாற்றங்களை வீச முனைந்ததாகக் குற்றம் சாட்டியே இந்தத் தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

மாட்ரிடில் நடந்த 'ஸ்பானிஷ் லீக் கால்பந்துப் போட்டியில், ரியல் மாட்ரிட் வீரர் மைக்கேல் சல்கோடா(வலது),பார்சிலோனாவீரர் ரொனால்டினோ இருவரும் பந்தைத் தட்டிச் செல்ல முனைகின்றனர். இப்போட்டியில் ரியல் மாட்ரிட் 4-2 என்ற கோல் கணக்கில் வென்றது.





சிந்தனைக்கு

சமாதானத்தை நான் ஆத்ம பூர்வமாக விரும்புகிறேன். எனது மக்கள் நிம்மதியாக, சமாதானமாக, சுதந்திரமாக, கௌரவமாக வாழவேண்டும் என்பதே எனது ஆன்மீக இலட்சியம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

சுழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 13-04-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
natham23 ela@ yahoo.com

கவனிக்க மறுப்பு!

வடபகுதியில் தொடர்ச்சியாக மக்கள் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என்ற வேறுபாடு எதுவுமின்றிப் போராட்டங்கள் நிகழ்ந்து வருகின்றன. இப்போராட்டங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்று வருகின்றனர்.

மேலும் இப்போராட்டங்களில் பல தரப்பட்ட மக்களும் பங்கேற்கின்றனர். பொதுஅமைப்புக்கள், அரச ஊழியர்கள், மாணவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புக்கள் எனப் பல்வேறு அமைப்புக்களில் இருந்தும் மக்கள் இப்போராட்டங்களில் பங்கேற்று வருகின்றனர்.

இப்போராட்டங்களில் முக்கிய கோரிக்கையாக சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்குவதில் அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் இணக்கப்பாடு ஒன்றிற்கு வருதல் வேண்டும். இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பாகப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்பவையே ஆகும்.

இதேசமயம், இக்கோரிக்கைகள் தொடர்பான மகஜர்கள் சிறிலங்கா சனாதிபதிக்கும், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான ஏற்பாட்டாளராகச் செயற்படும் நோர்வேத் தரப்பிற்கும், ஐ.நா. பொதுச் செயலருக்கும் மற்றும் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றமை வழமையாகியுள்ளது. அதாவது, மக்கள் தமது கோரிக்கைகளை சிறிலங்கா அரசாங்கத்திற்கும், சர்வதேச சமூகத்திற்கும் முன்னால் வைத்துள்ளனர் எனலாம்.

ஆனால், இதுவரையில் இப்போராட்டங்கள் குறித்து அரசாங்கத் தரப்பில் கவனம் எதுவும் செலுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. அதாவது, மக்களின் கோரிக்கை குறித்து அரசாங்கத் தரப்பு மக்களுக்கு எத்தகைய பதிலையும் அளிக்கத் தயாராக இல்லை. ஆகையினால், அரசாங்கம் இத்தகைய போராட்டங்களை அலட்சியம் செய்வதானதொரு தோற்றப்பாடே உள்ளது.

இதேவேளை ஐ.நா.வும் நோர்வேத் தரப்பும் ஏனைய சர்வதேச நாடுகளும் பொதுக் கட்டமைப்பு விடயத்திலும், இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான பேச்சுவார்த்தை குறித்தும் தமிழ் மக்களின் நிலைப்பாட்டிற்கு ஓரளவு ஒத்ததானதொரு நிலைப்பாட்டிற்கு உண்மையாகவே இருப்பதினால் தமிழ்மக்களின் கோரிக்கைகள் கருத்திற் கொள்ளப்பட்டனவோ இல்லையோ ஓரளவு யதார்த்த பூர்வமாகச் செயற்படுவதாகவே கொள்ளலாம்.

ஆகையினால் சிறிலங்கா அரசாங்கத்தின் இத்தகைய போக்கானது சுனாமி அனர்த்தம் தொடர்பான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளில் மட்டுமல்ல இனப்பிரச்சினை தொடர்பான விடயத்திலும், அது பொறுப்பற்ற விதத்தில் செயற்படுவதாகவே கொள்ளத் தக்கது. அது மட்டுமல்ல மக்களின் கோரிக்கைக்கு மாறுபட்ட அதாவது எதிர் மாறான செயற்பாட்டில் அது ஈடுபட்டு வருகின்றது என்றே கருத வேண்டியதாகிறது.

எடுத்துக் காட்டாக பொதுக் கட்டமைப்பு விடயத்தில் இணக்கப்பாடு ஒன்றிற்குப் போகும் முன்னர் புலிகளைச் சினம் கொள்ள வைத்து யுத்த நிறுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வரச் செய்வதிலேயே அது முனைப்புக் காட்டுவதாகவுள்ளது. அதாவது புலிகள் மீது நடத்தப்படும் மறைமுகப் போரைத் தீவிரமாக்குவதன் மூலம் இதனைச் சாத்தியமாக்கப் பார்க்கின்றனர்.

இதன் வெளிப்பாடே திருமலை மாவட்டத்தில் பூநகர் சோதனைச் சாவடி மீது சிறிலங்கா ஆயுதப்படையினரும், தமிழ்த் தேச விரோதக் குழுவினரும் இணைந்து மேற்கொண்ட தாக்குதலாகும். இத் தாக்குதல் மூலம் மட்டு – அம்பாறை மாவட்டங்களுக்கு வெளியில் குறிப்பாக திருமலை, வவுனியாப் பகுதியிலும் தமிழ் இன விரோதக் குழுக்களின் செயற்பாட்டை அரசாங்கம் தீவிரமாக்கியுள்ளது.

அரசின் இத்தகைய செயற்பாடானது தமிழ்மக்களின் உணர்வுகளைச் சிறிலங்கா ஆட்சியாளர்கள் எந்தளவிற்கு உதாசீனம் செய்கின்றனர் என்பதற்கான எடுத்துக்காட்டாக கொள்ளத்தக்கது. ஆனால் தமிழ்மக்களின் உணர்வுகள் தொடர்ந்தும் உதாசீனம் செய்யப்படுமானால் அதன் விளைவு எதுவாக இருக்கும் என்பதற்கு வரலாறே சாட்சியாகும்.

தமிழ்மக்களின் உரிமைக்கான ஆயுதப் போராட்டம் நீண்ட காலச் சாத்வீகப் போராட்டங்களின் பின் அதாவது அப்போராட்டங்களின் தோல்வியின் பின்னரே உருப்பெற்று வளர்ந்ததாகும். அதன் வளர்ச்சியானது இலங்கைத்தீவில் இரு இராணுவங்கள் இரு நிர்வாகங்கள், இரு கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் என்பனவற்றைத் தோற்றுவித்துள்ளன. இவ் வரலாற்றையும், இன்றைய யதார்த்தத்தையும் சிறிலங்கா அரசு மறந்து அல்லது மறுதலிக்கு மேயானால் இதற்கான விளைவுகளை அதுவே சந்திக்க வேண்டியதாகவிருக்கும்.

குளம் என்ற பெயரில் ஓடைகளையே விவசாயத்துறை அமைச்சர் அமைத்துள்ளார்

–ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர் ஹேம.குமாரநாணயக்கார

(கொழும்பு)

பாணந்துறையில் குளம் எனக் கூறி ஓடைகளையே விவசாய அமைச்சர் அனுரகுமார திசாநாயக்க அமைத்துள்ளதுடன் அங்கு "பத்தாயிரம் குளங்கள் புனரமைப்புத் திட்டம்" என்ற பெயர்ப்பலகையை மாத்திரம் விளம்பரப்படுத்தியுள்ளார் என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார். ஜே.வி.பி யின் குளம் அமைப்புத் திட்டம் காரணமாகவே விவசாயத் துறை வளர்ச்சிகண்டுள்ளதாக தெரிவித்தால் அது பொய்யான பிரசாரமாகும்.

ஜே.வி.பி யின் அமைச்சர் அனுரகுமார திஸாநாயக்க 900 குளங்களை அமைத்து விட்டதாக கூறுகிறார்.

அது பொய்யான கருத்தாகும்.

ஜே.வி.பி யைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு காரணத்துடன் பொய் கூறும் ஆற்றல் இருக்கிறது. பத்தாயிரம் குளங்கள் அமைக்கப் போவதாக ஜே.வி.பி தெரிவிக்கின்ற போதும் நாட்டின் பல இடங்களில் பரவலாக சில குளங்களையே அதனால் அமைக்க முடிந்துள்ளது. இந்த நிலையில் ஜே.வி.பி யினர் மக்களை தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது. என அவர் குறிப்பிட்டார். இலங்கையின் விவசாயத்துறையை நாசமாக்க ஐக்கிய தேசியக் கட்சி முனைவதாக ஜே.வி.பி விவசாயத் துறை அமைச்சர் அனுர குமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி 17 வருடங்களாக நாட்டை ஆட்சி செய்தது. அதன் பின்னர் இரண்டு வருடங்கள் நாடடில் ஆட்சி நடத்தியது.

எனினும் விவசாயத்துறைக்கு அந்தக்கட்சி எவ்வித முன்னேற்றத்தையும் கொண்டு வரவில்லை. அவ்வாறு அந்தக்கட்சி கூறுமாக இருந்தால் அது பாரிய பொய்யாகவே அமையும் என அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை அனுரகுமாரவின் கருத்தை மறுத்தே ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார மேற்படி கருத்தை வெளியிட்டார். (32)

நாட்டின் ஊடகவியல் சுதந்திரத்தினை விமல்வீரவன்சவின் கருத்து பாதிக்கின்றது

– சுயாதீன ஊடகவியலாளர் சங்கம்

(கொழும்பு)

தேசப்பற்றுள்ள தேசிய இயக்க கூட்டம் ஒன்றில் ஜே.வி.பி யின் பிரச்சார செயலர் விமல் வீரசவன்ச வெளியிட்ட கருத்தானது, இந்த நாட்டின் ஊடகவியல் சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாக சுயாதீன ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அவர் வெளியிட்ட கருத்தின் மூலம் வன்முறை தூண்டப்பட்டுள்ளதாக சுயாதீன ஊடகவியல் சங்க ஏற்பாட்டாளர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

விரோதத் தன்மையுடன் விமல் வீரவன்ச வெளியிட்ட இந்தக் கருத்தானது ஊடகவியலாளர்களுக்கு அச்சமூட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை இது தொடர்பில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்துக்கு கடிதம் ஒன்றும் சங்கத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

விமல் வீரவன்சவின் கருத்தானது மக்களுக்கு தகவலை வழங்கும் உரிமையை மறுக்கும் செயல் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விமல் வீரவன்ச, தமது உரையின் போது தமிழ்நெற் இணையத்தளத்தின் ஊடகவியலாளர்கள் உட்பட்ட ஊடகவியலார்கள் சிலரின் பெயர்களை குறிப்பிட்டு அவர்களை பாதையில் செல்ல அனுமதிக்க வேண்டாம் எனக் குறிப்பிட்டுள்ளார். (32)

பௌத்த விரோத சக்திகளுக்கெதிராக இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டமாம்

(கொழும்பு)

பௌத்த விரோத சக்திகளுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.ஜாதிக ஹெல உறுமய இதனை ஏற்பாடு செய்திருந்தது.

கொழும்பு விஹாரமாதேவி பூங்காவுக்கு அருகில் இந்த ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டது. பொத்துவில் பகுதியில் புத்தர் சிலை அமைப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம்□ வெளியிட்ட கருத்து தொடர்பிலேயே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பொத்□துவில் பகுதியில் புத்தர் சிலை நிறுவப்படுவதால் அங்கு பதற்ற நிலை தோன்றும் என அண்மையில் ரவூப் ஹக்கீம் பாராளுமன்றதில் தெரிவித்திருந்தார். இதனையே ஜாதிக ஹெல உறுமய ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (32)

இன முரண்பாடுகளுக்கு முடிவுகட்டி நாட்டை மீட்கும் காலம் நெருங்கி விட்டதாம்

-பிரதமர் மகிந்தராஜபக்ஷ கூறுகிறார்.

இன ரீதியாக நிலவி வருகின்ற முரண்பாடுகளுக்கு முடிவு கட்டி நாட்டை மீட்டெடுக்க வேண்டிய கால கட்டம் நெருங்கி விட்டதாக சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அநுராதபுர மாவட்டத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த யதார்த்த உண்மையை அண்மையில் ஏற்பட்ட ஆழிப்பேரலை சகலருக்கும் உணர்த்தி விட்டதாகவும் இதனை சாதகமாகப் பயன்படுத்த வேண்டியது ஒவ்வொருவருடைய கடமை ஆகும் ஒரு நாடு என்ற ரீதி யில் நாட்டை துண்டாட அனுமதிக்க முடியாது. நாட்டைப் பாதுகாத்துக் கொண்டு அனைவரும் இன, மத, மொழி பேதமின்றி ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதே எமது குறிக்கோள் என அவர் மேலும் தெரிவித்தார்.

முறையற்ற பணச்செலவு; அதிகாரி விசாரணையில்!

(மட்டக்களப்பு)

யுனிசெப் நிதியினைப் பொருத்தமற்ற முறையில் பயன்படுத்தியமைக்காக மட்டக்களப்புப் பிரதேச உயர் கல்வியதிகாரி ஒருவர் விசாரணைக் குப்படுத்தப்பட்டுள்ளார்.

யுனிசெப்பினால் ஆசிரியர்களிற்கும், மாணவர்களிற்குமான ஆறிவுட்டல் திட்டத்திற்காக வழங்கப்பட்ட 30 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட நிதியே இவ்வாறு காணாமற் போயுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக அரசாங்கக்கணக்காய்வாளர்களும், ஐ.நா.முகவர் நிலை யமும், விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். மேற்படி அதிகாரி அப்பணம் முழுவதனையும் தான் வங்கியில் வைப்பிலிட்டுள்ளதாகக் கூறியுள்ளார். ஆனால் ஐ.நா.முகவர் நிலையத்திற்கு மிகவும் நெருங்கிய தகவலறிந்த ஒருவர் தெரிவிக்கையில் மேற்படி நபர் வங்கியில் அப்பணத்தை வைப்பிலிட வில்லை எனத் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலை மூடும் திட்டத்தை கைவிடுமாறு கோரிக்கை விடுப்பு

பதுளை கொஸ்லாந்தை மீரியாபத்த தோட்டத்தின் வைத்தியசாலையினை மூடும் திட்டத்தை கைவிடவேண்டுமென கோரப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கையை மலையக மக்கள் முன்னணியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் அரவிந்தக்குமார் மஸ்கெலிய பெருந்தோட்ட நிறுவன நிர்வாகத்திடம் விடுத்துள்ளார்.

மீரியாபத்தை மற்றும் அயலில் உள்ள சுமார் மூவாயிரம் பேர் வரை இந்த வைத்தியசாலையின் மூலம் நன்மைபெறுகின்றனர்.

இந்த நிலையில் குறிப்பிட்ட வைத்தியாசலையை மூடுவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை தடுத்து நிறுத்த வேண்டுமென அரவிந்தக்குமார் கேட்டுள்ளார்.

யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவினர் வெலிக்கந்தவில் நடமாடும் சேவை

(வெலிக்கந்த)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்தப் பிரதேசத்தில் நடமாடும் சேவையை தற்போது ஆரம்பித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட கண்காணிப்புக்குழு அலுவலகத்திலிருந்து புதன் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் கண்காணிப்பாளரொருவர் அப்பிரதேசத்திற்கு விஜயம் செய்வார்.

இன்று செவனப்பிட்டியிலும் நாளை வெலிக்கந்தவிலும் முற்பகல் 11.00மணிமுதல் பிற்பகல்1.00மணிவரை கண்காணிப்புக குழுவினரின் வாகனம் குறிப்பிட்ட இடங்களில் தரித்து நிற்கும். அப்பிரதேச மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் அவற்றை பெற்றுக்கொள்ளுதல், அது குறித்து விசாரணைகளை மேற் கொள்ளுதல் போன்ற பணிகள் இதன்மூலம் முன்னெடுக்கப்படவுள்ளன.

அப்பிரதேசத்தில் முறைப்பாடுகளைப்பதிவுசெய்யும் அலுவலக மொன்றை திறப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கான கட்டட வசதிகள் இல்லாத காரணத்தினால் இந்நடமாடும் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கண்காணிப்புக் குழுவுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிக்குமார் அரசியலில் ஈடுபடுவதைத்தடுக்க சிபாரிசு அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பௌத்த பிக்குமார்கள் அரசியலில் ஈடுபடுவதை தடுக்கும் வகையில் சிபாரிசு அறிக்கையொன்றை புத்த சாசன ஆணைக்குழு சமர்ப்பித்துள்ளதாக சிறிலங்கா பௌத்த சாசன அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை கொழும்பில் நடைபெற்ற வைபவ மொன்றில் உரையாற்றிய அவர், பாராளுமன்றத்தில் நிறைவேற்றக் கூடிய சட்ட மூலங்கள் தொடர்பான கருத்துக்கள் உள்ளடக்கிய சிபார் சுகளும் இந்த ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார். (32)

"புளொட்" உதவியுடன் டக்ளஸின் படுகொலைகள்

(கொழும்பு)

ஈ.பி.டி.பி குழுவில் டாக்டர் விக்னேஸ்வரன் தலைமையில் இயங்கும் உறுப்பினர்களை புளொட் அமைப்பின் உதவியுடன் கொலை செய்யும் நடவடிக்கையில் டக்ளஸ் தேவானந்தா ஈடுபட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈ.பி.டி.பி அமைப்பிற்குள் டக்ளஸ் தேவானந்தா குழுவினர் எனவும், டாக்டர் விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினருமாக இரண்டு குழுக்கள்செயற்படத் தொடங்கியுள்ள நிலையில் டாக்டர் விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினரை புளொட் அமைப்பினரை வைத்துக் கொலை நடவடிக்கையில் டக்ளஸ் தேவானந்தா ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுன்றது.

இவ்வாறு நயவஞ்சக முறையில் ஈ.பி.டி.பி அமைப்புக்குள் உட்கொலைகளை நடாத்தும் தேவானந்தா ஒன்றும் தெரியாதவர் போன்று புலிகள் மீது வழமையான குற்றச்சாட்டினை சுமத்தி வருவதாக டாக்டர் விக்னேஸ்வரன் தலைமையில் செயற்படும் உறுப்பினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

யானை தாக்கி ஒருவர் பலி

(நமது நிருபர்)

இலுப்பைக்கடவைப் பகுதியில் காட்டுயானையின் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் சிப்பி ஆற்றுக்கரையோரமாக விறகு சேகரிக்கச் சென்ற இருவர் மீது தனியாக நின்ற யானை தாக்கியது. இதன்போது சடையன் முத்துச்சாமி (வயது 52) என்பவர் உயிரிழந்துள்ளார். இவருடன் சென்றவர் காயங்கள் எதுவும் இன்றி உயிர் தப்பியுள்ளார்.

தென்னாபிரிக்க...

தென்னாபிரிக்காவின் தேசியத் தலைவர் நெல்சன் மண்டேலா மொசாம்பிற்குச் சென்றுள்ளமையால் அவருடனான சந்திப்பு நடைபெறவில்லை.

தென்னாபிரிக்க விஜயத்தை முடித்துக்கொண்டு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளரும்,அவரது குழுவினரும் வத்திக்கானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

திருமலை சல்லிக்கிராம மக்கள் நேற்று வீதிமறியல் போராட்டம்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சல்லிக்கிராம மக்கள் தமக்கு இதுவரை எதுவித நிவாரண உதவிகளும் வழங்கப்படாததைக் கண்டித்து நேற்று வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடற் கோளினால் பாதிக்கப்பட்டு நான்கு மாதங்களாகியும் தங்களுக்கு எதுவித நிவாரணமும் அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை என்று கூறியயே சாம்பல் தீவு சந்தியில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுட்படவிதியிலிறங்கி மக்கள் மறியலில் ஈடுபட்டனர்.

மறியலில் ஈடுபட்ட மக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்த பொலிசார்,அவர்களை மேலதிகாரிகளைச் சந்தித்து இது குறித்துப் பேசுவதற்காக அழைத்துச் சென்றனர். அரச நிவாரணமாக தங்களுக்கு இதுவரை எவையும் கிடைக்கவில்லை என்று மக்கள் முறைப்பட்டனர். அனைவரும் கடற்றொழிலை நம்பிவாழ்பவர்கள். கடல் கோளினால் தங்களுடைய படகுகள் பெரும்பாலானவை அழிந்துவிட்டன என்றும் அவர்கள் மேலதிகாரிகளிடம் தெரிவித்தனர். (25)

சிறுப்பிட்டியில் வெடிவிபத்து; "ஹலோட்ரெஸ்ட்" பணியாளர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறுப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்ற வெடிவிபத்தொன்றில் "ஹலோட்ரெஸ்ட்" வெடிபொருள் அகற்றும் பிரிவைச் சேர்ந்த வெடி பொருள் அகற்றும் பணியாளர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முற்பகல் இடம்பெற்ற இவ் வெடிவிபத்தில் ஏரம்பு ரவீந்திரன் (வயது-23)என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"ஹலோட்ரெஸ்ட்" பிரிவினரால் மிதிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசத்தில் நடமாடிய போதே இவ் வெடிவிபத்து நேர்ந்துள்ளது. (33)

அன்புச்சோலை பேணலகத்திற்கு சூரிய மின்கலம் அன்பளிப்பு

(கிளிநொச்சி)

பொருண்மிய மதியுரையகத்தினால் லண்டன் ரெக் நிறுவன நிதியுதவியுடன் நேற்றுக் காலை அன்புச்சோலை மூதாளர் பேணலகத்திற்கு மூன்றுசூரிய மின்கலங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இந் நிகழ்விற்கு மூதாளர் பேணலகத்தின் நிர்வாக இயக்குனர் தலைமை தாங்கினார். இந் நிகழ்வில் தேசியக்கொடியினை அன்புச்சோலையின் பொறுப்பாளர் பரஞ்சோதி ஏற்றிவைத்தார். பின்னர் லண்டன் ரெக்கின் பிரதிநிதி விஜயதேவா சூரிய மின்கல உபகரணங்களை வைபவ ரீதியாகக் கையளித்தார். இங்கு லண்டன் ரெக்கின் பிரதிநிதி விஜயதேவா சிறப்புரையாற்றினார்.

புலிகள்...

அதில் பிரசுரமாகியுள்ளன. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது புலிகள் ஏற்கெனவே ஒரு தேசியத்தை அடைந்து விட்டார்கள் ஆழிப்பேரலை அனர்த்தத்துக்குப் பிறகு புலிகளின் தேசத்தை சர்வதேச அரசுகளும் ஓரளவுக்கு அங்கீகரித்துவிட்டன. இல்லாவிட்டால் புலிகளைச் சேர்க்காமல் நிவாரணப் பணி என்றால் நிதி கொடுக்க மாட்டோம் என்று பல நாடுகள் அறிவித்திருக்க மாட்டா இது புலிகளுக்கு புத்துணர்ச்சியைக் கொடுத்துள்ளது. ஆழிப்பேரலை ஏற்பட்ட 20 நிமிடங்களுக்குள் தமிழ் ஈழப்பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிவாரண வேலைகளில் ஈடுபட்டது. இதிலிருந்து புலிகள் இயக்கம் வெறும் பயங்கரவாத அமைப்பல்ல, மக்கள் நலனை முன்வைக்கும் முழுமையான அரசமைப்பு என்று புலனாகிறது. - தமிழீழத்தில் நடைபெறும் நீதிமன்றம் 1993 ஆம் ஆண்டு புலிகளால் ஆரம்பிக்கப்பட்டது.

அது இப்பொழுது முழுதானதோர் அமைப்பாக விளங்குகிறது. சிவில்,கிரிமினல் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் இந்திய நீதிமன்ற முறைப்படி நடக்கின்றன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இரு இடங்களில் உயர் நீதிமன்றங்கள் உள்ளன. - முழுமையான உள்நாட்டுக் காவல்துறை - குடிவரவுத்துறை என்பவற்றையும் அது கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்திரிகா...

எழுப்பியவண்ணம் மாவட்ட அரசாங்க அதிபர் பணிமனையைச் சென்றடைந்ததும் அங்கு வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் தலைமையில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் கண்டன உரைகளைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈழவேந்தன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து சனாதிபதிக்கான மகஜரினை வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த மாணிக்கம் வாசித்து அரசாங்க அதிபர் தி.இராசநாயகத்திடம் கையளித்தார்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட அரச அதிபர் அதனை உடனடியாக சனாதிபதிக்கு அனுப்பிவைத்து தகுந்த பதிலைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்தார்.

மேற்படிக் கண்டனப் பேரணியில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள்,வர்த்தக சங்கத்தினர் பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் கடும் வெயிலையும் பொருட்படுத்தாது கலந்துகொண்டனர்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் சாவகச்சேரி மத்திய பேருந்து நிலையப் பகுதியில் ஒன்று சேர்ந்த பொது மக்கள் கண்டனப்பேரணியில் கலந்து கொண்டனர். ஊர்வலமாகக் கண்டி வீதியில்சென்ற இவர்கள் பின்னர் டச்சு வீதியூடாக தென்மராட்சிப் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தனர்.

அங்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களைத் தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் அவர்கள் கையளித்தனர். சனாதிபதிக்கான மகஜரை தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் க.அருத்தவபாலன், பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனிடம் கையளித்தார்.

அதையடுத்து பிரதேச செயலர், வடகிழக்கு மாகாண சபையின் ஆளுநர், அரச அதிபர் ஆகியோருக்கான மகஜர்களை மகளிர் அமைப்பு, கடற்றொழிலாளர் சங்கங்கள் மற்றும் வர்த்தக சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கையளித்தனர்.

பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட இப்பேரணி நடைபெற்றபோது கலகம் அடக்கும் பொலிசாரும், படையினரும் சாவகச்சேரி நகரப் பகுதியில் நிலை கொள்ள வைக்கப்பட்டிருந்தனர்.

(கு.ச,27,28,33)

இல.புலனாய்வு....

உயர் பதவியில் மாற்றங்கள் ஏற்படுத்தப் பட்டன. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்ததும இந்த மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவினால் இந்த உயர் பதவியில் மாற்றம் கொண்டு வரப்பட்டது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்ற பின்னர் ஒரு மாற்றம் நிகழ்த்தப்பட்டது.

இலங்கையின் புலனாய்வு சேவையை தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வு சேவையுடன் ஒப்பிட முடியாத நிலை உள்ளதாக அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளால் ஒரு அமைப்பு என்ற ரீதியில் புலனாய்வுத்துறையை உள்நாட்டிலும்,வெளிநாடுகளிலும் முன்னின்று செயற்படுத்த முடிந்த நிலையில் இலங்கையின் புலனாய்வு சேவை தனித்தனியாக செயற்பட்டு அதனை நிறைவேற்ற முடியவில்லை என்பது குறையாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பாதுகாப்பு தகவல்களின் அடிப்படையில் இலங்கையின் புலனாய்வு தரப்பில் ஒத்துழைப்புகள் அரிதாகவே காணப்படுகின்றன.

பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மில்லியன் கணக்கான பணத்தைக்கொண்டு வெளிநாட்டுப் புலனாய்வு சேவைக்கு நிதி செலவிடப்படுகிறது.

எனினும் தமிழீழவிடுதலைப்புலிகள் வெளிநாடுகளில் காத்திரமான இரகசிய மார்க்கங்களை கைக்கொண்டு நிதி சேகரிப்பிலும் ஆயுதக்கொள்வனவிலும் ஈடுபடுகிறார்கள்

இந்த நிலையில் 1971 ஆம் ஆண்டு ஜே. வி. பி.யின் கிளர்ச்சியின் பின்னரே இலங்கையின் புலனாய்வு சேவையை உள்நாட்டு மட்டத்திலும், வெளிநாட்டு மட்டத்திலும் வளர்ச்சிக்கு கொண்டு செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

1988 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் புலனாய்வு சேவையை வெளிநாட்டு புலனாய்வு சேவையுடன் இணைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் பிரெஞ் முறையில் தமது புலனாய்வு சேவையை விரிவாக்கிய நிலையில் இதற்கான தேவை இலங்கையின் புலனாய்வுப்பிரிவுக்கு ஏற்பட்டது.

எனவே உள்நாட்டு புலனாய்வு சேவையும்,வெளிநாட்டு புலனாய்வு சேவையும் தனித்தனியே இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனினும் அது தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் அளவிற்கு செல்வாக்குச் செலுத்தவில்லை.

மறுபுறத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வு சேவை பாரிய வளர்ச்சியைப்பெற்றுள்ளது

இதேவேளை தற்சமயம் நாட்டில் யுத்தம் ஒன்று இடம் பெறாத நிலையில் இலங்கையின் புலனாய்வு சேவையை புனரமைக்க முடியும் என்ற போதிலும் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் சரியான திட்டங்கள் இல்லை எனப் பாதுகாப்புத் துறைத் தரப்புகள் தெரிவித்துள்ளன.

எனவே புலனாய்வுப் பிரிவின் பலவீனம் காரணமாக யுத்தம் ஏற்பட்டால் அதனை எதிர்கொள்வதில் இராணுவத்திற்கு சிரமம் ஏற்படும் எனப் பாதுகாப்பு தரப்புகள் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (32)

சாவு அறிவித்தல்

அமரர்

திரு. செல்லையா சிவசாமி

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும், நெளுக்குளம் வவுனியாவை தற்போதைய வசிப்பிடமாகவும், கொண்ட செல்லையா சிவசாமி (கிளிநொச்சி லலிதா றேடிங் கொம்பனியும்,ராங்வியூ கோட்டல்) உரிமையாளர் 12.04.2005 நேற்றுக் காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக் கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:-
சிவசாமி சிவகுமார் (மகன்),
லலிதா றேடிங்கொம்பனி,
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

(5990)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது